பக்கங்கள் :-பத்து

Registered as a News paper in Sri Lanka


விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி23 | செவ்வாய்க்கிழமை | (09.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 264




பிரித்தானியாவில் அண்மையில் இடம்பெற்ற 8ஆவது தேசிய தமிழர் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு வெற்றியீட்டி தாயகம் திரும்பிய தமிழீழ வலைபந்தாட்ட அணியை. தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கிளிநொச்சியில் நேற்றைய தினம் பாராட்டிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.



# இக்கட்டான சூழ்நிலையில் அரசு சிக்கிப்போயுள்ளது!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ் நிலையில் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் அரசு சிக்கியிருப்பதாக அமைச்சரவைப்.பேச்சாளர் அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அரசின் சமாதான முயற்சிகள் குறித்து எதிர்க் கட்சிகள் மேற் கொண்டு வரும் எதிர்ப்பியக்கங் களைக் கருத்திற் கொண்டு அமை ச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அர சினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதானச் செயற்பாடுகள் குறித்து எதனையும் அறிந்து கொள்ளாதவர் கள் அரசின் சமாதான முயற்சிக ளுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை யைக் கைவிட வேண்டும்;யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை வெளியேற்ற வேண்டும்.சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங் களிபபை இல்லாமல் செய்ய வேண் டும் என்ற மூன்று விடயங்களை யும் நடைமுறைப்படுத்துமாறு எதிர்க்

(10ம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து பாதுகாப்பு அமைச்சில் மாநாடு!

### அமைச்சர் மகேஸ்வரன் தகவல்

(திருநெல்வேலி)

உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராயும் உயர் மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் 18ந் திகதி பாது காப்பு அமைச்சில் இடம் பெறவுள்ள தாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பாஷையூர், நாவாந்துறை, குரு நகர், பருத்தித்துறை துறைமுகம், ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண கள் உயர்தரப் பாடசாலை, அம் பன் மத்திய மருந்தகம் மற்றும் தீவகத்தின் சில பகுதிகள் என்பவ ற்றை முதற் கட்டமாக உயர் பாது காப்பு வலயத்திலிருந்து விடுவிப் பது தொடர்பாக இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

இம் மாநாட்டிற்கு குடாநாட்டி லுள்ள அனைத்துப் பிரதேச செய லர்களும் அழைத்துச் செல்லப் படவுள்ளனர். (த-43)

## புலிகளின் திட்டவரைபு 18-ம் திகதி கையளிக்கப்படும்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிஸில் தயாரித்துள்ள இடைக் கால நிர்வாக சபை குறித்த திட்ட வரைபு இம் மாதம் 17-ம் திகதி இலங்கை வரவுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் மற்றும் சமா தானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் ஆகியோரிடம் விடுதலைப் புலிக ளால் கையளிக்கப்படலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

இம் மாதம் 17-ம் திகதி இலங்கை வரும் தூதுவர் விடார் ஹெல்கீசன், சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் ஆகிய இருவரும் 18-ம் திகதி வன்னி சென்று விடுதலைப் புலிக ளின் அரசியல் துறைப் பொறுப்பா ளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந் திக்கும் போது புலிகளின் திட்ட வரைபு அவர்களிடம் கையளிக்கப் படலாம் என்றும் தெரியவருகிறது.(ம)

## தமிழகத்திலிருந்து 15 அகதிகள் நேற்று நெடுந்தீவுக்கு வந்தனர்

(நெடுந்தீவு)

தமிழகம் இராமேஸ்வரத்தில் இருந்து ஈழத் தமிழ் அகதிகள் 15 பேர் நேற்று மாலை நெடுந்தீவு பெரிய துறையை வந்தடைந்தனர்.

இந்திய மீனவர்களின் படகுகள் மூலம் வந்தடைந்த அகதிகள் புதுக் குடியிருப்பு, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

அகதிகள் அனைவரும் நெடுந் தீவு பிரதேச செயலகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை யாழ்ப்பாணம் வரவழைக்கப்படும் இவர்கள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளனர்.

(த-48)

## ஆளும்கட்சி எம்.பிக்கள் இருவர் எதிர்க் கட்சி ஆசனத்தில் அமர்வர்

### பொ.ஐ.மு. செயலர் டி.எம்.ஜயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற அமர் வுகளின் போது ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரு வர் எதிர்க்கட்சி எம்.பிக்களின் ஆசனத்தில் அமர இருப்பதாக பொ.ஐ.முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் கூட்டத்தில் உரை யாற்றுகையிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

அக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அவர் ஐக்கிய தேசிய முன் னணி அரசு தற்போது இக் கட்டான

(10ம் பக்கம் பார்க்க)

## இராணுவ தண்ணீர் பவுசர் மாணவியை மோதியது

### அரியாலை மாம்பழம் சந்தியில் சம்பவம்

(கொழும்புத்துறை)

இராணுவத்தினரின் தண்ணீர் வவுசர் பாடசாலை மாணவியை மோதி காலில் ஏறியதால் கால் நசியுண்ட நிலையில் மாணவி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் அரியாலை மாம்பழம் சந்தியில் இடம் பெற்றது.

விபத்தில் சென்.சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 8-ல் கல்வி பயிலும் விஸ்வலிங்கம் பிரியதர்சினி

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடந்த ஐந்து வருடங்களில் 1096 பாடசாலைகளுக்கு மூடுவிழா

## கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் தகவல்

(கொழும்பு)

கடந்த 5 வருடங்களில் ஆயிரத்து 96 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

அப்புள்ளி விபரங்களின்படி பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நிதிக்கேற்றவாறு பயன்கிடைக்காமையே இதற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பிறப்பு வீதம் வீழ்ச்சியடைவதால், பாடசாலைகளில் அனுமதி பெறும் முதலாம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1990-ம் ஆண்டு 3 லட்சத்து 87 ஆயிரமாக இருந்த முதலாம் ஆண்டு மாணவர் அனுமதி கடந்த ஆண்டு 3 லட்சத்து 30 ஆயிரமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2001-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 162 பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை 1முதல் 15 ஆகவும், 457 பாடசாலைகளில் 16 முதல் 30 ஆகவும் 668 பாடசாலைகளில் 31 முதல் 50 ஆகவும்,744 பாடசாலைகளில் 51 முதல் 75 ஆகவும் காணப்பட்டது.

100 மாணவர்களுக்கு குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்டிருந்த 2 ஆயிரத்து 657 பாடசாலைகளே மூடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரு தசாப்தகால யுத்த நிலை காரணமாக பல பாடசாலைகள் அழிவுற்றதுடன் பல பாடசாலைகள் மூடப்பட்டன.

1997 ஆம் ஆண்டு முதல் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இலங்கையின் சகல மாகாணங்களிலும் உள்ள பல பாடசாலைகள் மூடப்பட்டு வருவது மக்கள் மத்தியிலும் கல்விமான்கள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (தி-8)

# அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் புளியங்கூடல் புறக்கணிப்பு?

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான நிதியொதுக்கீட்டில் புளியங்கூடல் கிராமம் புறக் கணிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஊர்காவற்துறைப் பிரதேச அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும் அதில் புளியங்கூடல் கிராமம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும்.

இக் கிராமத்தில் வீதிப் புனரமைபபு, குடிநீர்வசதி, மின்சார வசதி, பாலர் பாடசாலை அமைப்பு போன்ற பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாகவும் பொது அமைப்புக்கள் மேலும் தெரிவித்துள்ளன. (தி-75)

# மட்டு.மாவட்ட அபிவிருத்திக்கு ரூ.50 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கு திறைசேரி முதற்கட்டமாக 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தொடர்பாக திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு சுமார் 100 மில்லியன் ரூபா விறகான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, திறைசேரியின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், பசீர் சேவுதாவுத் ஆகியோர் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங் காவைச் சந்தித்து இவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

இதன் பிரகாரம் 50 மில்லியன் ரூபா நிதியை உடன் வழங்குமாறு திறைசேரியின் செயலாளருக்குப் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். (தி)

# கணனி மையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழக கணனி மையத்தை அதன் தலைவர் இ.ஜெயசேகரம் நேற்றுத் திறந்து வைத்தார்.

கடந்த வருடம் மேற்படி கழகத்தில் எடுத்த தீர்மானத்துக்கு அமையவே இக் கணனி மையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கழகத்தின் செயலாளர், பொருளாளர் மற்றும் பல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (தி-4)

## பின்னுறுதித் தீர்வை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

அருமைராசா ரங்கன் பெண்
தருமராஜன் மகள் கார்த்திகா
140, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

~ வழக்காளி ~

வழ.இல.மணநீக்கம்/280

எதிர்

அருமைராசா ரங்கன்
436, 4வது ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

~ எதிராளி ~

மேற்படி எதிராளிக்கு,

இவ் வழக்கு 2002ம் ஆண்டு சித்திரை மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் திருமதி பவானி சற்குணராசாவும் சமுகமாக இருக்கவும், எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது,

இவ் வழக்கின் எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேவிக்கப்பட முடியாமல் வழக்காளி தரப்பில் அழைப்புக் கட்டளை எதிராளியின் சுவரில் ஒட்டிய பதில் சேவை செய்ய விண்ணப்பித்து அதற்கமைய மன்று கட்டளையிட்டு, எதிராளிக்கு அழைப்புக்கட்டளை பதில் சேவகம் மூலம் எதிராளியின் வீட்டு சுவரில் ஒட்டிய அழைப்புக் கட்டளை சேவிக்கப்பட்டு திரும்ப வேண்டிய திகதி 15.02.2002ல் எதிராளி சமுகமில்லாமையால் இவ் வழக்கு ஒரு முகவிளக்கத்திற்கு திகதியிடப்பட்டு இருந்தமையும் கவனத்திற்கு எடுக்கப்பட்டு, வழக்காளியின் பிராது 08.03.2002ம் திகதிய சத்தியக்கூற்று வழக்காளியின் சாட்சியம் ஆவணம் வ1, ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்பு செய்த காரணத்தால் வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு,

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2000ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி நிறைவேற்றப்பட்ட பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டும் என்று வன்மமாகப் பிரிந்து வாழ்வதால், வன்ம உறவறுப்பு செய்த காரணத்தால் வெற்றும் வெறிதுமானதென இதனால் பின்னுறுதித் தீர்வையளிக்கப்பட்டு கட்டளை வழங்கப் படுகிறது.

அத்துடன் இப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்ட பின் வழக்காளி தன் கன்னிப் பெயரான தர்மராஜன் மகள் கார்த்திகா என்ற பெயரை உபயோகிக்கவும், திருமணம் ஆகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரித்துக்களையும் உரிமைகளையும் அனுபவிக்கலாமெனவும் பிரகடனப்படுத்தி பின்னுறுதித் தீர்வையளிக்கப்பட்டு கட்டளையிடப் படுகிறது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி எதிராளியுடைய வீட்டின் சுவரில் மன்றின் பிசுக்கால் மூலமாக பதில் சேவகமாக ஒட்டியும், "வலம்புரி"பத்திரிகையில் பதில் சேவகமாக விளம்பரப்படுத்தியும் மூன்று மாத காலத்துள், எதிராளி அதற்கு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் முற்றான தீர்வையாக்கப்படும்.

2003ம் ஆண்டு புரட்டாதி மாதம் 03ம் திகதி

மன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.


உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




- பேரினவாதத்தின் எதிர்ப்பலையை எதிர் கொள்வாரா பிரதமர் -பவானி
- கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழு -ஜெயன்
- சொந்த மண்ணைப் பார்க்க வந்தவர்கள் வாகன விபத்தில் பலியான சோகம். -டொறிங்ரன்
- கருவிலே கலைந்து போன ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி கூட்டு. -விதுரன்
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00


வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00


சங்கு நாதம்


(08-14 செப் 2003)

Sankunatham

# விளையாட்டுச் செய்திகள்







## பசியால் வாடும் எதியோப்பியருக்காக

# நீண்ட தூரம் ஓடி நிதி திரட்டுகிறார் ஓட்டவீரர்

எதியோப்பியாவில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நிலவிவரும் பசிப் பிணியைப் போக்க நிதி திரட்டும் பொருட்டு அந்த நாட்டின் நீண்ட தூர ஓட்டவீரர் கெனிசா ஓட்டமொன்றினை ஆரம்பித்துள்ளார்.

இதன்மூலம் கிடைக்கும் நிதியை எதியோப்பியாவில் பசியின் கொடுமையால் வாடும் ம்க்களுக்கு பயன்படுத்தப்போவதாக கெனிசா கூறியுள்ளார்.

இந்த நிதிதிரட்டும் ஓட்ட நிகழ்வுக்கு அண்மையில் பிரான்சில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் போட்டிகளில் 5ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் பெண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற றைடனஸ் டிபாவாவும் இணைந்து கொண்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(பி-68)

## மகளிர் சம்பியன் பட்டத்தை ஜெற்றின் கெனின் காடின் வென்றார்

அமெரிக்க பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டியில் மகளிருக்கான இறுதிப்போட்டியில் உலகத் தரப் படுத்தலில் முதலாம் நிலையில் உள்ள பெல்ஜிய வீராங்கனை இம் களைச்ரஸ் தோல்வியடைந்துள்ளார்.

இவரை சகநாட்டு வீராங்கனையான ஜெற்றின் கெனின் காடின் 7:5,6:1 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிகொண்டு அமெரிக்க பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றுள்ளார். 2003ஆம் ஆண்டுக்கான இச் சுற்றுப்போட்டியின் சம்பியன் பட்டம் வென்றுள்ள வீராங்கனையாகத் திகழும் ஜெற்றின் இப் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது இதுவே முதல்தடவையாகும்.

ஜெற்றின் கெனின் காடின் அரையிறுதிப் போட்டியின்போது தன்னை எதிர்த்து விளையாடிய அமெரிக்க வீராங்கனையான ஜெனீபர் கெப்பிரியாட்டியுடன் அதிக பிரயத்தனத்துடன் விளையாடியபோது அதிகளவு நீர் உடலில் இருந்து வெளியேறியதனால் உடல் உபாதைக்கு உள்ளாகி இருந்தமை அனைவரும் அறிந்ததே. இந் நிலையில் இறுதிப்போட்டியில் உடல் நிலை சரியாகக் குணமடைந்தால் மட்டுமே விளையாடப் போவதாக அறிவித்திருந்த ஜெற்றின் கெனின் காடின் இறுதிப்போட்டியில் விளையாடி சம்பியன் பட்டத்தையும் வென்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ் வெற்றியால் ஜெற்றினின் ரசிகர்கள் பெருமளவில் தமது மகிழ்ச்சியை அரங்கில் வெளிக்காட்டியதுடன் ஆரவாரத்துடன் இவ் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

(பி-68)

## கிரிக்கெற் போட்டித் தொடரில்

# நியு,சிலாந்து அணிக்கு இந்தியா பெரும் சவாலாக அமையும்

இந்திய துடுப்பாட்ட அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கரும ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வீரேந்தர் சேவாக்கும் பூரணமாக உடல் குணமடைந்திருப்பதனால் நியூசிலாந்து அணிக்கெதிரான கிரிக்கெற் டெஸ்ற் போட்டித் தொடரில் விளையாடுவார்கள் என இந்திய அணியின் பயிற்றுநரான ஜோன்றைட் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட்போட்டித் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது. கடந்த ஏப்ரல் மாதம் சத்திரசிகிச்சைக்குள்ளான சச்சின் டெண்டுல்கரும் கடந்த ஜூன்மாதம் உடல் உபாதைகுள்ளான சேவாக்கும் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை சுழல்பந்து வீச்சாளர் கர்பர்ஜன்சிங்கும் குணமடைந்து இருப்பதனால் இவரும் இப் போட்டிகளில் விளையாட உள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் வீரர்கள் ஆடவுள்ள போட்டித்தொடரில் இந்திய அணி சிறப்பாக விளையாடும் என்றும் நியூசிலாந்து அணிக்கு இது பெரும் சவாலாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-68)

## அமெரிக்க வீரர் அன்டிரொடிக்

# அமெரிக்கப் பகிரங்க டெனிஸ் போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துள்ளார்

அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் இடம்பெற்ற அமெரிக்க பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டியில் உலகத் தரப்படுத்தல் வரிசையில் நான்காம் நிலையில் உள்ள அமெரிக்க வீரரான அன்டிரொடிக் வெற்றிபெற்றுள்ளார்.

இவர் ஸ்பெயின் வீரரான யுவான் கார்லஸ் பெரேரோவை 6:3,7:6,6:3 என்ற மூன்று நேர் செற்களில் வெற்றிகொண்டு 2003ஆம் ஆண்டுக்கான அமெரிக்க பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டியின் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டுள்ளார். இது இவர் பெற்றுள்ள முதலாவது கிரான் செலம் பட்டமாகும். பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தை கைவிட்ட அமொக்காவிற்கு யுவான் கார்லஸ் பெரேரோ சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருப்பது அமெரிக்க ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இவ் ஆடவர் பிரிவில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான அமெரிக்க மற்றும் ஸ்பெயின் வீரர்கள் தமக்கான அரையிறுதிப் போட்டியில் உலகத்தரப்படுத்தலில் முதல் நிலையில் உள்ள அமெரிக்க வீரரான ஆந்ரே அகாசியை மூன்றாம் நிலையில் இருக்கும் ஸ்பெயின் வீரரான யுவான் கார்லஸ் பெரேரோ வெற்றி கொண்டார். இவர் ஆகாசியை 6:4, 6:3,3:6,6:4 என்ற செற்கணக்கில் தோற்கடித்திருந்தார். மற்றுமொரு அரையிறுதிப்போட்டியில் ஆர்ஜென்டீன வீரரான டேவில் நல்பாட்டியனை உலகத்தரப்படுத்தல் வரிசையில் நான்காம் நிலையில் உள்ள அமெரிக்க வீரரான அன்டி ரொடிக் 6:7, 3:6,7:6,6:1,6:3 என்ற ஐந்து செற்கள் கொண்ட போட்டிகளில் 3:2என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு இறுதிப்போட்டிக்குத்தெரிவாகி இருந்தனர். எனினும், இறுதிப்போட்டியில் அமெரிக்க வீரரான அன்டி ரொடிக் சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றுள்ளார்.(பி-68).

## சிங்கர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்

## சர்வதேச றக்பி போட்டியில்

# கென்ய, இலங்கை அணிகள் சம்பியன்

சிங்கர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அணிக்கு ஏழு பேர் பங்குபற்றும் சர்வதேச றக்பி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் இலங்கை அணி பெல்ஜியம் அணியைத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

கண்டி போகம்பர மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் 33:19என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை அணி பெல்ஜியம் அணியை வெற்றிகொண்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, சிங்கர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இன் அணிக்கு எழுவா பங்குபற்றும் சர்வதேச றக்பி சுற்றுப் போட்டியில் கென்ய அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இதற்காக நடைபெற்ற இறுதிப்போட்டியில் 15:12என்ற புள்ளிகள் அடிப்படையல் போத்துக்கல் அணியை கென்ய அணி தோற்கடித்தது.

(பி-68)

## சந்நிதியான் தேர்த்திருவிழா



### சந்நிதிவேலன் வருகின்றான்

அருமையான தேரில் இன்று
அழகு முருகன் வருகின்றான்
அடியார் எல்லாம் கூடியிருக்க
சந்நிதி வேலன் வருகின்றான்

அகிலம் எங்கும் சுற்றியவன்
…ன்பு கொண்டு வருகின்றான்
…மை வாழ்வை அகற்றிநிதம்
உரிமை வழங்க வருகின்றான்

ஈழத் தமிழர் அமைதிபெற
ஈசன் மகன் வருகின்றான்
சமாதான வாழ்வு மலர்ந்திடவே
தேரில் பவனி வருகின்றான்

சமூகஜோதி கா.கணேசதாசன்

### தேரேறும் முருகா

ஆற்றங் கரையினில் அழகுடைக் கோயில்
ஏற்றந் தந்துமே தேரேறும் முருகா
மாற்றம் வேண்டியே துதித்திடும் அடியவர்
போற்றுங் குரலுக் கின்னருள் தருவாய்

துரையர்

### காத்தருள வாராயோ

அலை கொஞ்சும் கடலோரம்
மேவியருள் சந்நிதிக் கந்தா!
அலைபாயும் உள்ளமுடன்
உனையே நாடும் அடியாரின்
குறை தீர்த்துப் பசிபோக்கி
நிறைவான அருள் தாராய்
கறைபடியா அகத்தாலே
நிறைவுதர உன் நாமம்
அறைகூவி அழைப்போமே
வேலவா! காத்தருள வாராயோ
நிறைமதி யொளி சிந்தும்
அழகுத் திரு முருகா அபயமே
தந் தெம்மைக் காலமெல்லாம்
வாழ வழிகாட்டும் ஐயா
துந்துமி முழங்க வீதிவலம்
வந்து அடியாருக்கு இரங்கிடுவாய்

கவிஞர் யாழோன்

### விடிவுதரும் வேலேந்தும் முருகா

கொடியேற்றி திக்கெல்லாம் கோவில்மணி ஒலிபரப்ப
கோடிமின் விளக்காகி கதிரவனும் ஒளிபரப்ப
அடியார்கள் கடல்மீது எழுமலையில் நீராடி
ஆலயத்தில் அருளோடு உன்பாதம் தேடிவர
படியேறி தட்டினிலே பால்பழமும் ஏந்திவர
பக்தியுடன் நெஞ்சில் உன்நாமம் தாங்கிவர
விடிவுதனை அருளும் வேலேந்தும் முருகா!
வருகின்றாய் தேர்மீது நல்வழியைத் தாராயோ

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா

## இன்று ஒரு தகவல்

# தேடல்

ஒரு ஊரில் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது வீட்டிற்கு வெளியூரில் இருந்து ஒரு யாத்திரிகர் வந்தார். அந்த யாத்திரிகருக்குத் தனது வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுத்தார் முதலாமவர். வந்த யாத்திரிகர் நிறையப்பணம் வைத்திருப்பதைப் பார்த்தார். அவர் பணம் வைத்திருப்பது இவருக்கு எப்படித்தெரியும் என்றால் அவர் தன்னிடம் உள்ள பணம் முழுவதையும் ஒரு பையில் வைத்துப் பகல் முழுவதும் சுற்றித்திரிவார். பையில் பணம் இருப்பது பளிச்சென்று தெரியும்!

ஆனால் இரவு நேரத்தில் அந்த யாத்திரிகர் அந்தப் பணத்தை எங்கே வைக்கிறார் என்று தெரியவில்லை! எங்கேயோ வைத்து விடுவார். "இவ்வளவு பணத்தை வைத்திருக்கின்றாரே" என்று வீட்டுச் சொந்தக்காரருக்கு ஆசை வந்தது. அந்தப்பணத்தை எடுத்துத்தான் பார்ப்போமே என்று ஒவ்வொரு நாளும் இரவில் எங்கே வைத்திருக்கின்றார் என்று தேடுவார். எங்கே தேடினாலும் அந்தப்பணம் கிடைக்காது.

இப்படிப் பல நட்கள் ஓடி விட்டன. எங்கே தான் வைத்திருக்க முடியும்? பகல் நேரத்தில் கையில் வைத்திருக்கக் கூடிய பணம் இரவு நேரத்தில் எங்கே வைக்கின்றார் என்றே தெரியவில்லை! அவருடைய பெட்டியில் தேடினார்! அவர் வைத்திருந்த பொருட்களில் தேடினார்! படுக்கைக்கு அடியில் தேடினார்! அவரது தலையணைக்கு அடியில் தேடினார்! எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

இப்படிப் பல நாட்களாகத் தேடித்தேடிக் கடைசியில் ஓர் இரவில் இவர் இப்படித் தேடும்போது அந்த யாத்திரிகர் எழுந்து வந்து இவரது முதுகில் தட்டினார். "என்ன தேடுகின்றீர்கள்?" என்றார் அவர். "ஒன்றுமில்லை" என்று தடுமாறினார் வீட்டுச் சொந்தக்காரர். யாத்திரிகர் சொன்னார் "எனது படுக்கைக்கு அடியிலும் எனது தலையணைக்குஅடியிலும் பணத்தைத் தேடுவதை விட உங்களது படுக்கையின் அடியிலே தேடுங்கள்" என்றார். இவரும் போய்ப்பார்த்தார். அந்த இடத்தில் பணம் இருந்தது!

இதற்கு என்ன பொருள் என்றால் பல சமயங்களில் நம்மிடத்தில் இருப்பதை வேறு எங்கேயோ தேடிக் கொண்டிருக்கின்றோம். நம்மிடத்தில் இருப்பது எது? ஆக்கமும், ஆர்வமும் நமக்குள் தான் இருக்கின்றன!

நமது புராணங்களில் ஒரு கதை உண்டு. மகாவிஸ்ணுவை ஒருஅரக்கன் துரத்திக் கொண்டு சென்றான். இரண்டு பேருக்கும் சண்டை நடந்தது. பல உலகங்களுக்கும் இரண்டு பேரும் போனார்கள். சண்டை தொடர்ந்தது. எங்கே போனாலும் அந்த அரக்கன் மகாவிஸ்ணுவை துரத்துவதை விடவில்லை. கடைசியில் மகாவிஸ்ணு ஒரு சின்ன உபாயம் செய்தார். எந்த இடத்திற்குப் போனால் அரக்கன் தன்னைத் துரத்த மாட்டான் என்று யோசித்தார். ஒரேயொரு கணத்தில் பதில் பளிச்சிட்டது. அவனுடைய மனதிற்கு உள்ளே சென்று அமர்ந்து கொண்டார். வெளியிடங்களைச் சுற்றிச் சுற்றி மகாவிஸ்ணுவைத் தேடிய அரக்கன் தன்னுடைய மனதிற்குள் அவர் இருப்பதைப் பார்க்காமல் விட்டு விட்டான். அங்கிருந்து மகாவிஸ்ணு தப்பித்துக் கொண்டார்.

இந்தக் கதை கடவுள் எங்கே இருக்கிறார் என்று காட்டுவதற்காக வந்த கதை அல்ல. ஆனால் இந்தக் கதை ஆக்கமும், ஆர்வமும் எங்கே இருக்கின்றன என்று காட்டுவதற்காக வந்த கதை. ஆங்கிலத்தில் ஆர்வம் எனும் சொல்லுக்கு வேறு ஒரு சொல்லைப் பயன்படுத்துவார்கள். இந்தச் சொல் எங்கேயிருந்து வந்தது என்று தேடிப்பார்த்தால் கிரேக்க மொழியில் இருந்து வந்த சொல் இது. என் எனும் கிரேக்கச் சொல் தான் இவ்வாறு உருமாறியது. என்டியோ என்றால் என்ன பொருள் தெரியுமா? என் என்றால் அகம், உள்ளம் என்று பொருள். டியோ என்றால் கடவுள். அதாவது கடவுளை வேறு எங்கும் தேட முடியாது உள்ளுக்குள் ஆழமாக கடவுளின் தன்மை உள்ளது என்பது தான் இதன் பொருள்.

வாழ்வில் பலவற்றைச் சந்திக்கும் போதும் பல மனிதர்களைச் சந்திக்கும் போது பல சந்தர்ப்பங்களைச் சந்திக்கும் போதும் ஆற்றலையும் ஆர்வத்தையும் வெளியே தேடுவதை விடுத்து உள்ளே உள் முகமாகத் தேடினால் அதுவே நம்முடைய வாழ்க்கைக்கு நிறைய வளத்தைச் சேர்க்கும்.

டாக்டர் சுதா

# வல்வை. ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் அன்பளிப்பு

(பீருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு வெளிநாட்டில் வசிக்கும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கிருஸ்ணசாமி அருளானந்தசாமி என்பவர் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவ் வைத்தியசாலைக்கு திருமதி செல்லம்மா பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக நோயாளர்களை ஏற்றிச் செல்லும் அதி நவீன ரக நான்கு சில்லு வண்டி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (பி-52)

## 2003ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பின்னர்

# அரச சேவையில் சேர்வோருக்கென புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

2003ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப்பின்னர் அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழ் நிரந்தர அடிப்படையில் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவோர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகம் செய்ய அரசு தீர்மானிக்கப்பட்டதாக அரச அறிவிப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கையில்,

திறைசேரி செயலாளரின் அனுமதியின்றி அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழ் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட எவரையும் புதிய ஓய்வூதிய முறையில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என நிதி அமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபை செயலாளர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இச்சுற்றறிக்கையின்படி இப்புதிய ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் ஊழியர்களின் நியமனங்கள் திறைசேரி செயலாளரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும்,

அவ்வாறு அங்கீகரிக்கப்படும் சான்றிதழின் பிரதியொன்று மத்திய வங்கிக்கு அனுப்பப்படாது விட்டால், புதிய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

# தேசியக் கூட்டமைப்பை அமைக்கும் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது

## ஜனாதிபதி சந்திரிகா உரை

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் நோமையுள்ள அரசியல்கட்சித் தலைவர்கள் இதய சுத்தியுடன் ஒன்று சேர்ந்து தேசியக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் களுத்துறைப் பிரதேசத்தில் இடம் பெற்ற வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகள் தொடர்பான வைபவத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க தலைமை தாங்கினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

அரசியல் கட்சித்தரைவர்களினால் இதய சுத்தியுடன் ஏற்படுத்தப்படும் கூட்டமைப்பு பரந்த அளவில் ஏற்படுத்த வேண்டும் அப்போது தான் சமாதான முயற்சிகளை எல்லோருடைய அனுசரணையுடனும் மேற்கொள்ளமுடியும் என்றும் கூறினார். (வ)

## இராசி பலன்

**09. 09. 2003**
**(ஆவணி 23, செவ்வாய்)**

சதுர்த்தசி - மு. இ. 10.42 வரை
அவிட்டம் - பி.ப. 5.04 வரை
இராகுகாலம் - 3.03 - 04.33
சுபநேரம் - 10.33- 12.03

**மேடம்**
தடைப்பட்ட காரியம் நிறைவேறும், புகழ், நல்லவருமானம், போசன சுகம்.

**இடபம்**
தூரதேச செய்தி, பிறர் உதவி, நல்ல முயற்சி, சுப நிகழ்ச்சி.

**மிதுனம்**
கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, சிந்தனை மிகுதி, ஆரோக்கியக்குறைவு.

**கடகம்**
திருடர் பயம், எதிர் பாராத பிரச்சினை, போசன சுகம், காரிய தாமதம்.

**சிங்கம்**
குடும்ப நன்மை, நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், தொழில் விருத்தி.

**கன்னி**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் விருத்தி, தேகஆரோக்கியம், பிரயாணம்.

**துலாம்**
குடும்பக்கவலை, எதிர்பாராத நன்மை, கௌரவக்குறைவு, புதிய திருப்பம்.

**விருச்சிகம்**
தாய் வழிஉறவு, நிலைமாற்றம், மனச்சஞ்சலம், பணத்தட்டுப்பாடு.

**தனுசு**
பிறர் உதவி, பிரயாண நன்மை, பொருள்சேர்க்கை, காரிய அனுகூலம்.

**மகரம்**
அதிக வார்த்தை, தொழில் கஷ்டம், பொருள் விரயம், தர்மம்.

**கும்பம்**
நல்ல முயற்சி, சுவாரஸ்யம், பொருள் சேர்க்கை, பிரயாணம்.

**மீனம்**
சயன சுகக்குறைபாடு, சுபசெலவு, காரிய அலைச்சல், திடீர் நன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- **வளவன்.**

சுகாதார சேவைகள்

# சம்பள முரண்பாடுகள் பற்றி ஆராய திறைசேரி அறிக்கை அவசியம்

(கொழும்பு)

சுகாதார சேவையில் நிலவி வரும் சம்பள முரண்பாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முன்னர் திறைசேரி ஆணையாளரின் அறிக்கை அவசியம்.

இவ்வாறு அமைச்சரவைக் குழுவின் தலைவரும் எரிபொருள் துறை அமைச்சருமான கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவையில் தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் இது தொடர்பாக பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் பி.தயாரட்ணவிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

சுகாதார அமைச்சர் வெளிநாடு சென்ற காரணத்தால், இப்பேச்சுவார்த்தையை எரிபொருள் துறை அமைச்சரை நடத்துமாறு கேட்டிருந்தார்.

எனினும், திறைசேரி ஆணையாளரின் அறிக்கை கிடைக்காமல் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் பயன் இல்லை என மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# வாகனப் பராமரிப்புக்கு பணம் போதாதென எம்.பிமார் முறையீடு

(கொழும்பு)

தொலைபேசி, போக்குவரத்து, எரிபொருள் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து எம். பிக்களின் வாகனப் பராமரிப்பிற்காக 15 ஆயிரம ரூபாவை அரசாங்கம் வழங்கி வருகிறது.

அத்துடன், சலுகை விலையில் எம்.பிக்கள் தமது வாகனங்களுக்கு ரயர், ரியூப் போன்றவற்றையும் வாங்க அனுமதிக்கப்படுவார்கள்.

இதேவேளை, 15 ஆயிரம் ரூபா வாகனப் பராமரிப்பிற்கு போதாதென எம். பிக்கள் கூட்டாக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

அத்துடன், தாம் தமது தேர்தல் தொகுதிகளுக்கு மாதத்தில் 3 தடவைகள் பயணம் செய்ய வேண்டியிருப்பதாகவும் இவர்கள் கூறியுள்ளனர். சமபத்திய இவர்களது வேண்டுகோளின் படி சகல வெளி மாவட்ட எம். பிக்களுக்கும் மாதத்திற்கு 7 ஆயிரத்து500 ரூபா கூடுதலாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி ஒரு எம்.பி. 15 ஆயிரத்திற்குப் பதிலாக 23 ஆயிரம் ரூாபவை வாகனப் பராமரிபபிற்காகப் பெறுவார். இச் சலுகை அடுத்த மாதம் முதல் நடை முறைபடுத்தப்படவுள்ளது. (பி)

## சமாதானம் மலர வேண்டுமாயின்

# மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## யாழ்.ஆயர் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

சமாதானம் மலரவேண்டுமாயின் மனித உரிமைகள் பாதுகாகக்ப்பட வேண்டும். மனித உரிமைகள் மீறப்படுமாயின் சமாதானம் ஒருபோதும் மலர வாய்ப்பிருக்காது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இலங்கைக்கான கத்தோலிக்க திருச்சபையின் நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்பு நடாத்திய நாடகப் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அடிகளார் உரையாற்றும் போதே மேற்கொண்டவாறு தெரிவிததுள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

நாம் எமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். சமாதானம் என்று மேடைகளில் பேசுகிறோம், எழுதுகிறோம். ஆனால் அவ்வாறான சமாதானம் உருவாவதற்கு சிறுவர்களது உரிமைகளும் பாதுகாப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எமது நாடு நிரந்தர சமாதானத்தை நோக்கிப் பயணித்துக கொணடிருக்கும் இவ்வேளையில், நாடு முழுவதும் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும். சிறுவர்களின் பாதுகாப்பும், உரிமைகளும் உறுதிப்படுததப்பட வேண்டும்.

அதேசமயம், இவ்வாறு இடம்பெற்று வரும் நாடகங்கள் பல சமுதாய முன்னேற்ற கருத்துக்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. இவை நடைமுறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். அத்துடன், சிறுவர் மீது கட்டவிழத்து விடப்படுகின்ற வன்செயல்கள் கட்டுப்படுத்தப்படுவதுடன், அவர்களின் உரிமைகள் உரியவாறு வழங்கப்பட வேண்டும் என யாழ். ஆயர் மேலும் தெரிவித்துள்ளார். (க-18,51)

# தமிழ்ப் பண்போடு ஆரியப்பண்பையும் சேர்த்துப் பின்னப்பட்டதே திருமுருகாற்றுப்படை

சங்க இலக்கியங்களுள் முதன்மையாக வைத்துப் போற்றப்பெறும் திருமுருகாற்றுப்படை காலத்தால் பழைமையுடையதன்று. எட்டுத்தொகை நூல்களில் பரிபாடலும், கலித்தொகையும் பிற சங்க நூல்களை விடப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவையே என்று பல அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றனர். அவற்றைப் போலவே 10 பாட்டுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையும் பிற பாட்டுக்களுக்குக் காலத்தால் பிந்தியதேயாகும்.

ஒரு நூலுக்குக் கடவுள் வாழ்த்தை முதலில் வைக்கவேண்டும் என்ற பழககம் ஏற்பட்ட பிற்காலத்தில் தான் பத்துப் பாட்டுத் தொகுக்கப்பெற்றிருக்க வேண்டும்; அதனால், கால வரிசை கருதாது கடவுள் வாழ்த்தாக இருப்பதால், திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டுள் முதற் பாட்டாக வைக்கப்பெற்றது எனலாம்.

பொதுவாகத் தமிழர்களுக்கு கால உணர்வு இல்லை என்பது தமிழ் இலக்கிய வரலாற்றை நுணுகி நோக்குவார்க்குப் புலனாகும். திருக்குறள், திருவாசகம், திருமந்திரம் போன்ற இலக்கியங்களின் காலத்தை எவ்வளவு பின்னுக்குத் தள்ள முடியுமோ அவ்வளவு பெருமை அந்த இலக்கியங்களுக்கு ஏற்படும் என்ற தவறான எண்ணம் இன்னும் பல தமிழறிஞர்களிடம் உள்ளது. கபிலர், நக்கீரர், ஔவையார், பரணர், அகத்தியர் போன்ற பெயர்களில் ஒரே ஒருவர்தான் பிறந்திருக்க முடியும் என்று கருதுகின்றனர். அதியமானைப் பாடிய ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் ஒருவரே என்கின்றனர். திருக்குறள் இயற்றிய திருவள்ளுவரும், ஞானவெட்டியானைப் பாடிய திருவள்ளுவரும் ஒருவரே என்கின்றனர். இவர்கள் சங்க இலக்கியங்களில் ஊடுருவியுள்ள ஆரிய கலப்பைப் பிரித்தறியும் ஆற்றல் இலராவர்.

எனினும், பிற சங்க இலக்கியங்களைக் காட்டிலும், பரிபாடல் கலித்தொகை, திருமுருகாற்றுப்படை ஆகிய மூன்றிலும் ஆரியர்களின் பண்பாடு தமிழ்ப்பண்பாட்டினூடே மெல்ல, மெல்ல ஊடுருவுமாறு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்ச்சி அறிவுடையாரே உணர முடியும்.

ஈண்டுத் திருமுருகாற்றுப்படையில் ஊடுருவிய ஆரியப் பண்பாட்டைக் காணலாம். பிற்காலத்தில் ஆரியப் பண்பாடும், தமிழ்ப் பண்பாடும் இரண்டறக் கலந்துவிட்டதால், இவற்றைப் பிரித்தறிவது கடினமே. எனினும், சங்க இலக்கியங்களில் ஒப்பீட்டாய்வு மூலம் அவற்றை எளிதில் பிரித்தறிய முடியும்.

★ பிற சங்க இலக்கியங்களில் முருகன் மற்ற மாந்தர்களைப் போல ஒருமுகம் உடைய வீரனாகவும், கடவுட்தன்மை உடையவனாகவும் காணப்படுகிறான். வடமொழிக் கந்தபுராணத்தையொட்டி முதன்முதலாக முருகன் அறுமுகக் கடவுளாக, பன்னிரு கையனாகத் திருமுருகாற்றுப்படையில் அறிமுகப்படுத்தப்படுகிறான். கந்தபுராணக் கருத்துக்கள் திருமுருகாற்றுப் படையிலும், பரிபாடலிலும் மிகுந்து காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலைவாய்ப் பகுதியில் ஆறு திருமுகங்களும், பன்னிரு கைகளும் என்னென்ன தொழில்களில் ஈடுபட்டிருககின்றன என்று கூறப்படும் செய்திகள் பரிபாடலைத் தவிர பிற சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. பிற்காலத்தில் குமர குருபரர் பாடிய

## ஆய்வாளர்கள் தெளிவு

கந்தர் கலிவெண்பாவில் முருகனின் ஆறு திருமுகங்களும், பன்னிரு கைகளும் இயற்றும் தொழில்களுக்கும், திருமுருகாற்றுப் படையில் அவை இயற்றும் தொழில்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

★ தெய்வங்களுக்கு ஊர்திகள் (வாகனங்கள்) கூறுவது வடமொழி மரபே. முருகனுக்குப் பிணி முகம் என்ற களிறு ஊர்தியாகத் திருச்சீரலைவாய் கூறுகிறது. பிற சங்க இலக்கியங்களில் ஊர்தி கூறப்படவில்லை. பிற்காலத்தில் முருகனுக்குரியதாக ''மயில்'' ஊர்தி கூறப்பட்டுள்ளது.

★ பிராமணத் தமிழறிஞர்கள் வாய்ப்பு நேரும்போதெல்லாம் வடமொழிக் கருத்துக்களைத் தம் நூல்களில் புகுத்தி வந்திருப்பதை நக்கீரர் முதல் சுத்தானந்த பாரதியார் வரை அவர்கள் இயற்றிய நூல்களில் தெளிவாக உணர முடியும்.

### முருகனின் முகங்களில் ஒன்று

''மந்திர விதியின் மரபுளி வழா அ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே''
(வரி 95-96)

என்று கூறப்படுகின்றது. இங்கே பிராமணர்கள் செய்யும் வேள்விகட்கு இடையூறு நேராத படி காக்கும் பொறுப்பு முருகனுடைய ஒரு முகத்திற்குத் தரப்பெற்றுள்ளது. விநாயகர், முருகன், சிவன், தேவி, திருமால் ஆகியோரின் வடமொழி ஆயிரந் திருநாமங்களில் ஒன்று ''பிராமணப் ப்ரியாயை நமஹ'' என்பது. தெய்வங்களே பிராமணர்களுக்குப் பிரியமானவர்கள் என்று கூறியதன் மூலம், அரசர்களும் மற்றவர்களும் பிராமணர்களைத் தங்கள் தலைமேல் வைத்துக் கொண்டாட வேண்டும் என்ற குறிப்புப் புகுத்தப்பட்டுள்ளது.

நக்கீரரும் பிராமணர்களின் வேள்விக்குக் காவலன் முருகன் என்று கூறியதன் கருத்து அரசர்களும், மற்றவர்களும் பிராமணர்களின் வேள்விகளுக்கு உறுதுணை புரியவேண்டும் என்பதே. விநாயகர், முருகன், சிவன், திருமால் ஆகியோரின் திருவுருவங்கட்குப் பூணூல் அணியச் செய்ததும் ஆரியக் கலப்பின் அடையாளமே.

★ முருகனுக்குப் ''பல்பொறி மஞ்ஞை வெல்கொடி'' (122) அதாவது, சேவல்கொடி கூறப்பட்டுள்ளது கந்தபுராணக் கருத்தை அடியொற்றியதே.

★ குறிஞ்சித் தெய்வமான முருகன் எல்லா மக்களுக்கும் பொதுவான கடவுளாயினும் திருஆவினன் குடிப் பகுதியில் முனிவர்களுக்குரிய கடவுளாகவே வர்ணிக்கப்படுகிறான். இந்த முனிவர்கள் பெரும்பாலும் பிராமணர்களாகவே இருந்தனர்.

★ 160 ஆம் வரியில் இந்திரன், யமன், வருணன், குபேரன் ஆகிய நால்வரும் நான்கு காவல் தெய்வங்களாகக் கூறப்படுகின்றனர். வேதத்தில் இவர்கள் பெருந்தெய்வங்களாகக் கூறப்பட்டிருப்பதையொட்டியே நக்கீரரும் இக்கருத்தைக் ''திருஆவினன் குடிப்'' பகுதியில் புகுத்திவிட்டார். எமனை ஒரு காவல் தெய்வமாகத் தமிழ் மரபு ஏற்றுக் கொண்டதேயில்லை. அதுபோல வேதகாலப் பெருந்தெய்வமான இந்திரனையும் தமிழர்கள் எப்போதும் பெரும் தெய்வமாக ஏற்றுக்கொண்டதில்லை. இப்பகுதியில் கந்தருவர், கந்தருவமகளிர், திருமால், இந்திரன் பற்றிய பல புராணச் செய்திகள இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தில் இவை காணப்படவில்லை.

★ ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய ''திருவேரகம்'' பற்றிய பகுதி முழுதும் இரு பிறப்பாளராகிய பிராமணர்களுக்காகவே ஒதுக்கப்பட்டிருப்பது நக்கீரரின் பிராமண உயர்வுப் போக்கையும், தம்மினத்தின் பெருமையை நிலைநாட்டும் ஆர்வத்தையும் தெள்ளென வெளிப்படுத்துகிறது.

48 ஆண்டுப் பிரம்ச்சரியம் பூணுவது தமிழ் மரபன்று.

★ முருகன் வள்ளியைக் காதலித்த செய்தி பிற சங்க இலக்கியங்களில் கூறப்பெறுகிறது. நக்கீரர் கந்தபுராணத்தை அடியொற்றித் தெய்வயானை (தாவில் கொள்கை மடந்தை)யை முருகனுக்கு இரண்டாவது மனைவியாகக் கூறுகிறார். (வரி 175) ''மறுவில் கற்பின் வாணுதல்'' (வரி - 6) என்றும் குறிப்பிடுகிறார்.

★ முருகன் சூரபன்மனைக் கொன்ற செய்தி 60 ஆம் வரியில் வருகின்றது.

இது கந்தபுராணத்தை ஒட்டிக் கூறப்பட்டுள்ளது. நக்கீரர் வடமொழிக் கந்தபுராணத்தை தமிழ் முருகனுடைய செய்திகளோடு அருமையாகப் பின்னிப் பிணைந்து விட்டார். பிற்காலத்தில் தமிழ்ச் சமய மரபு முழுதும் ஆரிய மயமாக்கப்பட்டுள்ளது.

★ முருகன் சரவணப் பொய்கையில் தோன்றியதையும், ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் ஆறு பேரும் பாலூட்டி வளர்த்ததையும், உமாதேவி ஆறு பேரையும் ஒன்றாக்கியதையும் கந்தபுராணச் செய்திகளைப் புகுத்தி நக்கீரர் பாடுகிறார். (வரி 253-55)

★ பிராமணத் தமிழறிஞர்கள் தங்களது பிராமணத் தன்மையை என்றும் மறப்பதில்லை. வாய்ப்பு வரும்போது பிராமணப் பெருமையைப் புகுத்திவிடும் மரபை மு[illegible]ன்முதலில் தோற்றுவித்த பெ[illegible] அந்தணரான நக்கீரருக்கே [illegible] பழமுதிர்ச் சோலைப் ப[illegible] முருகனுக்குத்'' தமிழில் அருச்சனை செய்யும் போது நக்கீரர் முருகனை 'அந்தணர் வெறுக்கை' (263) அதாவது பிராமணர்களின் செல்வமே என்று ஒரு கருத்தைச் சேர்த்து விடுகிறார். இந்த ஆரியக் கலப்பு பிறகு எல்லாச் சகசிர நாமங்களிலும் இடம் பெற்றுள்ளது. வள்ளற் பெருமான் சிவபெருமானை ''எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே'' என்று கூறுகிறார். நக்கீரரோ முருகனைப் ''பிராமணர்களின் செல்வமே'' என்று கூறுகிறார். இவ்வாறே வடமொழியாளர்கள் பிராமணர் குலத்தில் பிறவாத இராமன், கண்ணன் முதலிய பிறர் எல்லாக் கடவுளரையும் பிராமணர்களுக்குரிய தெய்வமாக்கிவிட்டனர். எல்லாருக்கும் உரிய கடவுளைத் தங்களுக்கே உரிய சொத்தாக்கிக் கொண்டனர். வருவாய் தரும் எல்லாக் கோயில்களையும் கையகப் படுத்திக் கொண்டனர். இந்த ஒரேயொரு தொடரில் நக்கீரர் ஆரியக் கலப்பு வேலையை அற்புதமாகச் செய்திருக்கிறார். இதுவே பிற்காலத்தில் எல்லாப் பிராமணத் தமிழறிஞர்களுக்கும் வழிகாட்டியாய் அமைந்துவிட்டது.

உலகில் உயர்ந்த பொருள்களையெல்லாம் தம்வயமாக்கிக் கொள்ளும் கலையில் கைவந்தவர்கள் பிராமணர்கள் என்பதை வரலாறு கூறுகின்றது. தங்களை உயர் பிறப்பாளராகவே இடையறாத தீவிரப் பிரசாரம் செய்து வெற்றிபெற்றுள்ளனர்.

திருமுருகாற்றுப்படையை நாள்தோறும் பாராயணம் செய்பவர்களுக்கு நக்கீரரின் ஆரியக் கலப்புப் புலனாகாது. ஆய்ந்து நோக்குவார்க்கே அஃது புலனாகும். சமயத்தின் பெயரால் தமிழ் மரபுகளை ஆரிய மயமாக்கலில் முதல் வெற்றிகண்டவர் நக்கீரரே. பிற்காலத்தில் சமயத் துறை முழுதும் ஆரிய மயமாக்கப் பட்டுவிட்டது. தமிழ் அர்ச்சனை மரபுகள் மறக்கப்பட்டு விட்டன. எல்லாக் கடவுள்களும் தமிழ் தெரியாத ஆனால், வடமொழி மட்டுமே அறிந்த கடவுளகளாக மாற்றப்பட்டு விட்டனர்.

அறிவியல் ஆய்வுக்கூடத்தில் தண்ணீரை உயிர்வழியாகவும், நீர் வழியாகவும் பிரிக்க முடியும் ஆனால், தமிழர்களின் சமயத் துறையில் தமிழ் மரபையும், ஆரிய மரபையும் இனிப் பிரித்தறிய முடியாது. இதனால்தான் ஆரியர்கள் தமிழர்களின் சமய அறிவெல்லாம் தாங்கள் அளித்த பிச்சை என்று கூறி வருகின்றனர். தமிழில் என்ன இருக்கின்றது என்று அஞ்சாமல் கேட்டு வருகின்றனர். வடமொழியின்றித் தமிழர்களுக்குச் சமய வாழ்வே இல்லை என்று அடித்துக் கூறி வருகின்றனர். இதனால் தான் அப்பர் பெருமானும் ''ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!'' என்று ஒருவகைச் சமரசத்தில் ஈடுபட முயன்றார்.

**முனைவர் மு.சதாசிவம்**

★ பின்வரும் புராணச் செய்திகள் திருமுகாற்றுப் படையில் புகுத்தப்பட்டுள்ளன.

✪ சூரியன் மேருமலையை வலமாகச் சுற்றி வருகின்றது (1)

✪ சூரபதுமனையும் அவனுடைய படைகளையும் அழித்தான் முருகன் (57-60)

✪ திருமால் கருடக் கொடியுடையவன் (151)

✪ இந்திரன் ஆயிரங் கண்களை உடையவன் (155)

✪ இந்திரன் ஐராவதம் என்ற யானையை உடையவன் (159)

✪ திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியவன் பிரமன் (165)

✪ முப்பத்துமூன்று தேவர்கள்; பதினெண் கணங்கள் (167)

திருமுருகாற்றுப்படை தமிழ் மரபும், ஆரிய மரபும் பின்னிப்பிணைந்த கலவையாக உள்ளது. இது தமிழ் இலக்கியங்களின் மீது ஆரிய மரபு படையெடுத்து வெற்றிகொண்ட பானமையைக் காட்டுகிறது. இந்நூல் தமிழ மரபில் ஆரியக் கலப்புச் செய்வற்குப் பிற்காலத்துப் பிராமணத் தமிழறிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. ★

---

# எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வுத் திட்டம்; தொடர்ந்து செயற்படுத்தக் கோரிக்கை

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் தகவல்

(ஈச்சமோட்டை)

தற்போது அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், யுனிசெப் நிறுவனமும் யாழ். மாவட்டத்தில் இணைந்து நடத்திவரும் எயிட்ஸ்நோய்த் தடுப்பு விழிப்புணர்வுத் திட்டத்தை காலத்தின் தேவை கருதித் தொடர்ந்து செயற்படுத்துமாறு பல நிறுவனங்களும் பொது அமைப்புகளும். வலியுறுத்தி வருவதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும இத் திட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளதாகவும், எதிர்காலத்தில் இந் நோய்த் தாக்கத்தில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்க இத்திட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து பல தொண்டு நிறுவனங்களும், பொது அமைப்புக்களும், பாடசாலைகளும் தமது ஆலோசனைகளை எழுதி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படவுள்ள எயிட்ஸ் நோய் விழிப்புணர்வுத் திட்டம் பருவ வயதினருக்கும்,இளைய சமுதாயத்திற்கும் சென்றடையும் வகையில் புதிய யுக்திகள் புகுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

கடந்த 10 மாதங்களில் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு இவ்விழிப்புணர்வு ஊட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (பி-59)

## பேராளர் சங்கமம்

(கந்தரோடை)

வலிகாமம் தெற்கு பிரதேசதேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு செயலாளர் செ.செல்வராசா தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அனைத்து பிரதேச உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (பி-103)

---

# ஆலோசனைக் கூட்டங்களை முஸ்லிம் கட்சிகள் நடத்தவேண்டும்

(கொழும்பு)

தேர்தல் சீர் திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதால், முஸ்லிம் அரசியல் கட்சியில் தமது பிரதிநிதித்துவங்களை உறுதிசெய்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக் கள் ஒன்றியத்தின் செயலாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் சட்டமூலத்தில் திருத்தங்கள் கொண்டுவருவதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு கடந்த மாதம் 22ஆம் திகதி நியமிக்கப் பட்டது.

இந்நிலையில், சிங்கள, தமிழ் மொழி மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களைக் கருத்திற் கொண்டும், முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமது பிரதிநிதிகளை உறுதிசெய்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்துவது அவசியமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கும், ஏனைய பிரதேச முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்திற்கும் பங்கம் ஏற்படாத வகையில் இவ் ஆலோசனைக் கூட்டங்கள் முன் வைகக்கப்படவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

(தி)

## 86 கோடி மக்களுக்கு எழுத்தறிவு இல்லை

(கொழும்பு)

உலக நாடுகளில் 86கோடி மக்கள் எழுத்தறிவு அற்று இருப்பதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்படடுள்ளது.

இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர். பெண்கள் ஆவர் என சர்வதேச எழுத்தறிவு தினத்தை ஒட்டி அமெரிக்க நிறுவனம் விடுத்துள்ளது அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (தி)

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஈராக் முக்கிய இடம் வகிக்கிறது

## அங்கு அனைவரின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்

## மாதாந்த உரையில் புஷ் உறுதி



(வாஷிங்டன்)

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தில் ஈராக முக்கிய இடத்தை வகிப்பதாகவும், அங்கு அனைவரினதும் பாதுகாபு உறுதிப் படுத்தப்படும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டயிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி மூலம் தமது நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே ஜோர்ஜ் டயிள்யூ புஷ் இதனைத் தொரிவித்தார.

ஈராக்கில் யுத்தத்தின் பின்னரான மீளமைப்புப் பணிகளுக்கு அமெரிக்க காங்கிரஸிடம் இருந்து 87 மில்லியன் அமெரிக்க டொலரை புஷ் கோரியுள்ளார்.

புஷ் நிர்வாகத்தின் கீழ் ஈராக்கில கடைப்பிடிக்கப்பட்டுவரும் கொள்கைகள் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியும், அமெரிக்கத் துருப்புக்கள் பலா ஈராக்கில் உயிரிழந்து வரும் நிலையிலும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் உரை இடம்பெற்றுள்ளது.

சுதந்திரத்தின் எதிரிகள் ஈராக்கில் துணிச்சலான நிலையைக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் வெகு விரைவில் தோற்கடிக்கப்படுவார்கள் என்வும் புஷ் தனது உரையில் சூளுரைத்துள்ளார்.

அதேசமயம் முன்னைய கருத்து வேறுபாடுகளைக் கைவிட்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஈராக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (பி-9)

## பெங்களூரில் சிவாஜி பிறந்தநாள் விழா

(பெங்களூர்)

பெங்களூரில் செப்டம்பர் 14-ம் தேதி சிவாஜி கணேசனின் 75-ம் ஆண்டு பிறந்த நாள் நிறைவு விழா நடைபெறவுள்ளது.

இதுகுறித்து டாக்டர் சிவாஜி கணேசன் நினைவு அறக்கட்டளைத் தலைவர் மா. நடராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

விழாவுக்கு கர்நாடக திரைப் படத் தயாரிப்பாளர் ஏ. ராதாகிருஷ்ணராஜு தலைமை வகிக்கவுள்ளார். கர்நாடக சிவாஜி மன்றத் தலைவர் மா. நடராஜ் வரவேற்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவாஜிகணேசன் மகன் ராம் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவைத் தொடங்கி வைக்கிறார். நடிகை பி. சரோஜா தேவி சிவாஜி ஜோதியை ஏற்றி வைக்கவுள்ளார்.

சிவாஜி பிறந்த நாள் மலரை நடிகை செளகார் ஜானகி வெளியிடுகிறார். நடிகர் ஒய்.ஜி. மகேந்திரன், எம் எல் ஏ-க்கள், எம். முனி சாமி, தினேஷ் குண்டுராவ் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். (பி)

# கம்பியூட்டர் வரைந்த கொலையாளியின் படம்

(சென்னை)

சென்னை பாரிமுனை லாட்ஜில் பெண்ணை கொன்ற கொலையாளியின் படத்தை பொலிசார் கம்பியூட்டரில் வரைந்துள்ளனர். அவரைப் பற்றி துப்புக் கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும் என அறிவித்துள்ளனர்.

சென்னை பாரிமுனை பிரான்சிஸ்-ஜோசப் தெருவில் உள்ள விஜயா மேன்சன் என்னும் லாட்ஜில் கடந்த 3-ம் தேதி இரவு 11 மணியளவில் 35 வயது மதிக்கத்தக்க வாலிபரும், இளம் பெண்ணும் தங்கினர்.

அந்த வாலிபர் தனது பெயரை சந்திரசேகர் என்றும் திருச்சி கணேசபுரம் எழில்நகரைச் சேர்ந்தவர் என்றும் அப்போது தெரிவித்திருந்தார்.


5-ம் திகதி காலை 8 மணியளவில் லாட்ஜ் அறை திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருந்தது. அந்த அறையிலிருந்து வந்த துர்நாற்றத்தையடுத்து, பொலிசில் இது குறித்து புகார் தெரிவிக்கப்பட்டது.

பொலிசார் லாட்ஜ் அறைக் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு இளம் பெண் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் கழுத்து நெரிக்கப்பட்டு குளியல் அறையில் இறந்த நிலையில் கிடந்தார்.

கொல்லப்பட்ட பெண் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் என்ற விவரம் தெரியவில்லை. அவளுடன் வந்த வாலிபர் தப்பியோடி விட்டார். அந்த வாலிபர்தான் அப் பெண்ணை கொன்று இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

அந்த வாலிபரின் அடையாளம் ரூம் பாய் வேளாங்கண்ணிக்குத் தெரிந்திருந்தது. வாலிபர் கொடுத்த திருச்சி முகவரி தவறான என்பது தெரிய வந்தது.

இதற்கிடையே லாட்ஜ் ஊழியர்களிடம் பொலிசார் நடத்திய வசாரணையில் அவரது அடையாளம் தெரிந்தது. அந்த வாலிபர் மாநிறமாகவும், குள்ளமாகவும் இருந்தார்.



இதைக் கொண்டு பொலிசார் கொலையாளியின் படத்தை கம்பியூட்டர் மூலம் வரைந்தனர். 3 மணி நேரத்தில் இந்த படம் வரையப்பட்டது.

கொலையாளியின் படம் திருச்சி திருவெறும்பூர் பொலிஸ் சரகத்துக்கு அனுப்பபட்டுள்ளது. இதை வைத்து பொலிசர் கொலையாளியை தேடி வருகிறார்கள்.(பி)

# இஸ்ரேலியப் பிரதமரை இந்தியாவில் கொலை செய்ய அல்ஹெய்டா சதித்திட்டம்

(புதுடில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்யும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனை கொலை செய்ய அல் கெய்டா தீவிரவாத அமைப்பு சதித் திட்டம் தீட்டியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால், இஸ்ரேல் பிரதமரின் விஜயத்தை முன்னிட்டு இந்தியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் அல் கெய்டா அமைப்பினருடன் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் இன்றும், நாளையும் புதுடில்லி தங்கி அரசின தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளார்.

ஏரியல ஷெரோனின் விஜயத்தை இந்தியாவிலுள்ள முஸ்லிம் அமைப்புகள் கண்டித்துள்ளன.

இஸ்லாமியருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாகவே இந்தியா இஸ்ரேலுடன் கைகோர்க்க இருப்பதாக இந்தியாவிலுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. (பி-9)

# இஸ்ரேலின் புதிய பிரதமராக சபாநாயகர் அஹமட் நியமனம்

(ரெல்அவிவ்)

பலஸ்தீனத்தின் புதிய பிரதமராக சபாநாயகர் அஹமட் ஹொாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இராஜதந்திர ரீதியாக செயற்பட்ட இவர் மக்கள் ஆதரவு குறைந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இவரது நியமனத்தை மக்கள் ஏற்பார்களா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றன்ர்.

முன்னாள் பிரதமர் முகமட் அப்பாஸ் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மொஹமட் அப்பாஸின் இராஜினமாவைஅடுத்து, இஸ்ரேல் படையினர் பலஸ்தீனர் கேந்திர நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைக் கட்டுப்படுத்துமுகமாகவும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் நோக்கிலேயே இந்த நியமனம் யஸீர் அரபாத்தினால் செய்யப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

# விநாயகர் ஊர்வலத்திற்கு முஸ்லிம் ~ கிறிஸ்தவர் வரவேற்பு

(சென்னை)

வடசென்னையில் இந்து முன்னணி சார்பில் நடத்தப்பட்ட விநாயகர் சிலை ஊர்வலத்தை முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் வரவேற்றனர்.

சென்னையில் ஞாயிற்றுக் கிழமை விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கடலில் கரைக்கப்பட்டன.

வடசென்னை புளியந்தோப்பு, ஆர்.கே.நகர், கொருக்குப்பேட்டை, நேதாஜி நகரில் முஸ்லிம் ஜமாத்தைச் சேர்ந்த பிர்முகர்கள் பல் அந்த வழியாகச் சென்ற ஊர்வலத்துக்கு சிறப்பான வரவேற்பு அளித்து இந்து முன்னணியினரை வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

இதே போன்று சென்னையில் ஆங்காங்கு புறப்பட்ட ஊர்வலங்களை கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் மத நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில்தொடங்கிவைத்தனர்.

கொருக்குப்பேட்டை பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்கள், ஒரு விநாயகர் சிலையை வழிபாட்டுக்கு வைத்திருந்தனர். விநாயகர் சதுர்த்தியான (ஆக்.31) முதல் 7 நாள்களாக அந்த விநாயகர் சிலைக்கு பூஜைகள் நடத்தப்பட்டன.

இதையொட்டியே அப் பகுதியில் உள்ள அனைத்து சிலைகளுக்கும் அவர்கள் வரவேற்பு கொடுத்தனர்.

வடசென்னை காவல்துறை இணை ஆணையர் சைலேந்திர பாபு, புளியந்தோப்பு காவல்துறை துணை ஆணையர் சமுத்திர பாண்டி உள்பட ஆர்.கே.நகர் பொலசார் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பாராட்டினர்.(பி)



வடசென்னை கொருக்குப்பேட்டை ஆர்.கே.நகர் பகுதியில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி இந்து முன்னணி சார்பில் நடைபெற்ற விநாயகர் சிலை ஊர்வலத்தில் பங்கேற்ற முஸ்லிம், கிறிஸ்தவர்கள்.

# இலங்கையிலுள்ள இந்திய மீனவரை விடுவிக்க உதவுக

## பிரதமருக்கு ஜெயா கடிதம்

(சென்னை)

இலங்கைச் சிறைகளில் வாடும் தமிழக மீனவர்கள் 34 பேரை விடுவித்துக் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் வாஜபாயிக்கு முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாகப் பிரதமருக்கு முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில்.

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் தற்போது இலங்கைச் சிறைகளில் உள்ளனர். அவர்கள் 17 முதல் 177 நாள்கள் வரை சிறைகளில் உள்ளனர். சர்வதேச விதிமுறைகள் அனைத்தையும் மீறி அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் விடுதலை குறித்து தகவல் எதுவும் இல்லாத நிலையில் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர் சமுதாயத்தினரிடையே கவலையும், நிம்மதிக் குறைவும் ஏற்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் பரம்பரையாக கச்சத்தீவுப் பகுதியில் மீன் பிடித்துவருவதை நீங்கள் அறிவீர்கள். இலங்கை மீனவர்கள் தற்போது அதைத் தடுக்கின்றனர். இலங்கைக் கடற்படையினரின் உதவியுடன், சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு தமிழக மீனவர்களைத் தாக்குவதிலும், பிடித்துச் செல்வதிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

இலங்கை அரசுடன் தூதரக அளவில் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து தமிழக மீனவர்கள் 34 பேரையும் விடுவிக்க் தாங்கள் முயற்சிக்க வேண்டும்




என வற்புறுத்துகிறேன்.

இப் பிரச்சினைக்கு நீண்ட கால அடிப்படையில் நிரந்தரத் தீர்வு ஒன்றை உருவாக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் மூலம் உறுதியான நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகிறேன் என முதல்வர் ஜெயலலிதாகூறியுள்ளார். (பி)

# குடாநாட்டுப் பொருள்களின் விலை நிர்ணயம் பற்றிய விமர்சனங்களை தவிர்க்க வேண்டும்

## பத்திரிகையாளர் மாநாட்டில் ஜெயசேகரம் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

புலிகளால் இடப்படும் வரிநிர்ணயத்தை உலகின் கண்களுக்குப் பெரிதுபடுத்திக்காட்ட வேண்டும் என்பதற்காகவே சில அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ்.மாவட்ட வர்த்தகப் பொருட்களின் விலைகளை விமர்சனம் செய்து வருகின்றன.

இவ்வாறு யாழ்.மாவட்ட வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

வணிகர் கழக அங்கத்தவர்கள் பலர் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் தொடர்ந்தும் அவர் கருத்து வெளியிடுகையில்,

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தற்போது உள்ள வியாபார முறையானது மிக வித்தியாசமான போக்கைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

ஏ-9 பாதை திறக்கப்படுவதற்கு முன்னர் யாழ்.நகருக்கும் கொழும்புக்குமான நேரடித் தொடர்புகள் ஏதும் அற்ற வேளையில்,யாழ்ப்பாண வர்த்தகர்கள் தமக்குரிய பொருட்களை இடைத்தரகர் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை இருந்தது.

அத்துடன்,கப்பல் மற்றும் விமானப் போக்கு வரத்துச் செலவும் அதிகரிததிருந்த காரணத்தால், யாழ்ப்பாணத்திற்கும்,கொழும்பிற்கும் இடையில் ஒரே பொருளின் நுகர்ச்சி விலைகளுக்கு இடையில் வேறுபாடுகள் இருந்து வந்தது உண்மை.

ஆனால்,புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஏ-9வீதி திறந்த பின்னர் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திற்கு இடையில் நேரடித் தொடர்புகள் இருப்பதன் காரணமாக,இடைத்தரகர்கள் அற்ற நடவடிக்கைகளை யாழ்.வர்த்தகர்கள் மேற்கொண்டு வருவதுடன்,பொருட்களை உற்பத்தி நிறுவனங்களில் இருந்து நேரடியாக கொள்வனவு செய்வதன் மூலம் கொழும்பில் விற்பனை செய்யப்படும் அதே விலைக்கு இங்கும்நுகர்வோருக்கு வழங்கக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில்,யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வரப்படும் பொருட்களுக்கு புலிகளால் விதிக்கப்படும் வரி ஒரு சுமையாக இருக்காததால்,இந்த விலை நிர்ணயம் எமக்குப் போதுமான வருமானத்தை பெற்றுத்தருகிறது.

ஆனால்,இந்த வரி அமைப்பைச் சாதகமாகக் கொண்டு மருந்து வகைகள் போன்ற வரி விலக்குள்ள பொருட்களையும் வரிஅறவீட்டின் தொகையுடன் சேர்த்து சில வர்த்தகர்கள் விற்பனை செய்துவருவது கண்டிக்கப்படவேண்டியது.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். அரச அதிபர் போதியளவு கவனம் செலுத்தி இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என வணிகர் கழகத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

யாழ்.மாவட்ட புனர்வாழ்வுப் பணிகளுக்கென ஒதுக்கப்படும் நிதிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் திட்டமிட்ட முறையில் மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படவேண்டும்.


கடந்தகால யுத்தத்தினால் நாம் சிக்கித் திணறிய காலங்களிலும் ஏனைய மாவட்டங்கள் எம்மைவிட பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ளன.

எனவே, எமக்கு [illegible] வாறான பல முன்னேற்றகரமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

அதேசமயம் யாழ். குடாநாட்டையும், மக்களையும் உற்பத்தி நிறுவனங்கள் தமது வியாபாரத்திற்காக துஷபிரயோகம் செய்யக்கூடாது. அவ்வாறான உற்பத்தி நிறுவனங்கள் இனம் காணப்படும் பட்சத்தில் அவர்களின் உற்பத்திப் பொருட்கள் யாழ். நகரில் விற்பனை செய்வதற்கு தடை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும்.

எந்தவோர் அரசசார்பற்ற நிறுவனமோ அல்லது புத்திஜீவிகள் எனக் கூறிக்கொள்வோரோ யாழ. குடாநாட்டும் பொருட்களின் விலை நிர்ணயம் பற்றிய சந்தேகங்கள் இருப்பின் யாழ். வணிகர் கழகத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் வகையில், விமர்சிப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது எனவும், அதேவேளை, அரச சார்பற்ற நிறுவனங்களின் இவ்வாறான விமர்சனத்திற்கு தாம் கடும் ஆட்சேபம் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-4)





யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மிதிவெடியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கான உதவு பொருட்களை வழங்கும் நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் உதவு பொருட்களை வழங்குவதையும், பொருட்களைப் பெறக் காத்திருப்போரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-க.பவன்)

# முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் பிரகடனம் ஒன்றை பிரதமர் வெளியிடுவார்

## சமூக சேவைகள் அமைச்சர் தகவல்

(அம்பலாங்கொட)

முதியவர்கள் விடயத்தில் இன்றைய இளைஞர்கள் அக்கறை எடுக்காமல் இருப்பது கவலை அளிக்கும் விடயமாகும். நமது சந்ததியினருக்காகவும், சமூகத்திற்காகவும் முதியவர்கள் புரிந்துள்ள தியாகங்களை நாம் மறந்துவிடலாகாது. முதியவர்களுககான இல்லங்கள் என்ற கோட்பாட்டை மாற்றி யப்பானில் இருப்பது போல் தன்னார்வ பராமரிப்பு இல்லங்கள் என்ற முறைக்கு நாம் திரும்ப வேண்டும். இதன்மூலம் நமது உறவினர்களால் புறக்கணிக்கப்படும் முதியவர்களுக்குச் சிறப்பான வாழ்வை அமைத்துக் கொடுக்க முடியும்.

இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர பலப்பிட்டியாவில் முதலியார் பெரேரா அபய வர்த்தன முதியோர் இல்லத்தின் 50 ஆவது வருடாந்த விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார்.

வயோதிபர்களின் பிரச்சினை நாளுக்குநாள் பல இடங்களிலும் பெருகி வருகின்றது.

இன்னும் சிறிது காலத்தில் முதியவர்களின் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்து விடக்கூடும். எதிர்காலத்தில் அரசுகள் பதவிக்கு வருவதற்கு முதியவர்களின் வாக்குப் பலத்தைத்தான் நம்பியிருக்கவேண்டிவரலாம் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அக்டோபர் முதலாம் திகதி முதியோர் உரிமைகள் பற்றிய பிரகடனம் ஒன்றைப் பிரதம மந்திரி வெளியிடவிருக்கிறார். அதன்படி தமது பெற்றோர் குறித்த கடமைகளைப் புறக்கணிக்கும் பிள்ளைகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் வழிவகுக்கப்படும் என்றார். (பி)

# திருமலைத்துறைமுகம் தாக்கப்படலாம் கதிர்காமர் கூறியது உண்மையானதே!

## கடற்படை பேச்சாளர் ஒத்துப்பாடுகிறார்





யாழ். வணிகர் கழகத்தில் நேற்று கணனி மைய அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள். (படங்கள்:- க.பவன்)

(கொழும்பு)

''திருகோணமலை துறைமுகம் எந்த நேரத்திலும் விடுதலைப்புலிகளால் தாக்கப்படலாம்''

என முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பது மிகவும் சரியான கருத்து என கடற்படைத்தலைமையகப் பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை துறைமுகம் மீது விடுதலைப்புலிகள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என லக்ஷ்மன் கதிர்காமர் கூறிய செய்தியை பிரதமர் கடந்தவாரம் மறுத்துள்ளமை பற்றி ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிடுகையிலேயே கடற்படைத் தலைமையகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர், இதுபற்றி மேலும் கருத்து வெளியிடுகையில்,

''பிராந்திய கடற்படைத்தளபதியர் அட்மிரல் வசந்த கரணகொட வழங்கிய தகவல்களை வைத்து கதிர்காமர் கற்பனைக் கதைகளை அவிழ்த்து விட்டுள்ளார் என பிரதமர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆனால்,கதிர்காமருக்கு மேற்படி அதிகாரி வழங்கிய நம்பிக்கை பூர்வமான அறிக்கையின் அடிப்படையிலான தகவல்கள்யாவும் எம்மிடம் இருக்கிறது.

எனவே,கதிர்காமர் கூறிய கருத்து சரியானது என்பதுடன் அவர் கூறியது கற்பனைக்கதையல்ல உண்மையான கருத்தென்பதையும் இங்கு கூறவிரும்புகிறேன்.

இதேவேளை,கடந்த மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மேற்படி பிராந்திய கடற்படைத்தளபதி லக்ஷ்மன் கதிர்காமருக்கு கிழக்கின் பாதுகாப்பு நிலவரம் குறித்து விளக்கியிருந்த போதே திருகோணமலைத் துறைமுகம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் இராணுவத் தளபதி பலகல்ல, கடற்படைத்தளபதி தயாசந்தகிரி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் தற்போதைய பாதுகாப்பு ஆலோசகருமான சந்திரானந்த டி.சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர் ஜனாதிபதி இதில் கலந்து கொள்ளவில்லை என்றார்.

இதேசமயம்,லக்ஷ்மன் கதிர்காமருக்கு பிராந்திய கடற்படை அதிகாரி மேற்படி கூட்டத்தில் வைத்துக் கொடுத்த இதே விளக்கம்,பாதுகாப்பு அமைச்சரிற்கும், அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது .திருகோணமலையைச் சுற்றி தமிழீழ விடுதலைப்புலிகள் முகாம்கள் அமைத்து வருகின்றனர். இதனால் இந்தியக் கம்பனிகளால் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கும் எண்ணெய்க் குதங்கள் மீது எந்த நேரத்திலும் புலிகள் தாக்குதலை நடத்தலாம் என கதிர்காமர் கடந்த மாதம் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது அங்கு நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தமையும் அதனை பிரதமர் ரணில் முற்று முழுதாக மறுத்திருந்தமையும் தெரிந்ததே. (பி-10)

# பிரதமர் ரணில் இன்று மலேசியா பயணம்

(கொழும்பு)

பிரத்மர் ரணில் விக்கிரம சிங்க இருநாள் விஜயமொன்றை மேற் கொண்டு இன்று மலேசியா பயணமாக வுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தையும்,முதலீடுகளையும் அபிவிருத்தி செய்வதே பிரதமரின் விஜயத்தின் நோக்கமாகும்.

பிரதமர் ரணில் மலேசியப் பிரதமர் டாக்டர் மகதீன் மொகமட்டையும், அந்நாட்டு அரசியல்வாதிகளையும், முதலீட்டாளர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடதத வுள்ளார்.

கொழும்புக்கும்- கண்டிக்கும் இடையிலான அதிவேக நெடுஞ்சாலை தொடர்பான ஒப்பந்தமும் இவ் விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட வுள்ளது. (தி)

## கடந்த 6 மாதங்களில் ஆடை ஏற்றுமதி மூலம் 140 கோடி வருமானம்

(கொழும்பு)

இவ்வருடம் முதல் 6மாத காலப் பகுதியில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு 140 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது.

கடந்த வருடம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் வருமானமாக 240 கோடி ரூபா கிடைத்துள்ளது.

இவற்றில் பிரிட்டன்,அமெரிக்கா போன்ற நாடுகளிற்கான ஏற்றுமதி மூலம் 190 கோடி ரூபா கிடைத்துள்ளது.

பாரிய,நடுத்தர,சிறிய ரக ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளில் 3 லட்சத்து 33 ஆயிரம் தொழிலாளர்கள் கடமையாற்றி வருகின்றனர். (தி)

## இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமைச் சட்ட மூலம் இம்மாத இறுதியில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இந்திய வம்சாவளியினரை நிரந்தர இலங்கைப் பிரஜைகளாக்கும் வகையிலான பிரஜாவுரிமைத் திருத்தச் சட்ட மூலம் எதிர்வரும் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதற்கான திருத்தங்களுடன் முன்வைக்கப்படவுள்ள மேற்படி திருத்தச் சட்ட மூலப் பிரேரணையை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க சபையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஏற்கனவே, அமைச்சரவையிலும், பாராளுமன்ற ஆலோசனைக் குழுவாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள இநதச் சட்ட மூலம்சகல கட்சிகளினதும் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சட்டமூலத்தின் மூலம் சுமார் 1இலட்சத்து 50 ஆயிரம் இந்திய வம்சாவளியினர் இலங்கை பிரஜைகளாகும் வாய்ப்பு உருவாகும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (தி-18)

அன்பு மாணவர்களே!
மிக விரைவில் எதிர் பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
குடாநாட்டின் முன்னணி ஆசிரியர்களால்
தயாரிக்கப்பட்ட கா.பொ.த (சாதாரண)
பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள்.

பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

★நயினாதீவு
★சரசாலை
★கொய்யாத்தோட்டம்
★கல்வியங்காடு
★மண்கும்பான்
★ஓட்டுமடம்
★வல்வெட்டித்துறை
★புன்னாலைக்கட்டுவன்
★குப்பிளான்

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்களை;


பிரதம ஆசிரியர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு இம் மாதம்20-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்புரி ஆளணி முகாமையாளர்

## அரசியலில் ராசி இல்லா ராசா அனுரா...




# பெண் போராளிகளின் பலம் என்ன என்பதை சர்வதேசம் உணர்ந்துள்ளது

## மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் உரை

(வவுனியா)

பெண்கள் தங்களுடைய ஆளுமைக்கு உட்பட்ட வகையில் தமது



பிரதேசத்தில் உள்ள பெண்களுடைய அபிவிருத்தி தொடர்பான வேலைத் திட்டத்தினை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக பொருளாதார, கல்வி போன்ற துறைகளில் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் சுயதொழில் வாய்ப்பிலும் ஈடுபட வேண்டும்.

பெண்கள் விழிப்படைவது தான் எங்களுடைய விடுதலையின் முதல் படி. அத்துடன் தங்களுடைய ஆளுமையினை கட்டி எழுப்ப வேண்டியவர்களாகவும் பெண்கள் திகழ வேண்டும். பெண்களுடைய பலம் என்ன என்பதினை நாங்கள் உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி கடந்த சனிக் கிழமை மாலை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், சமூகமாற்றத்தினை பெண்களால் தான் உருவாக்க முடியும். பெண்கள் சமூகத்தின் இணை பிரியாத அங்கமாவும் இயல்பாகவே முழுமை பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆனால், காலம் காலமாகவே பெண்கள் பின்தள்ளப்பட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைக்குள் வாழ்ந்து வந்துள்ளனர். தங்களுடைப பலத்தை உணராதவர்களாகவும் முக்கிய தீர்மானங்களை எடுக்க முடியாதவர்களாகவும் வாழ்ந்துள்ளனர். கடந்த காலங்களில் அவ்வாறு அவர்கள் வளர்க்கப்பட்டு விட்டார்கள். தமிழ் மக்கள் மீதான போர் திணிக்கப்பட்ட போது, இயல்பு நிலை குழப்பி பெண்கள் மீது ஏற்கனவே திணிக்கப்பட்ட வரையறைக்குள் இருந்து விடுபட முடியாது அவதிப்பட்டார்கள். இதன் காரணமாக பெண்கள் இயல்பாகவே வெளியே வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

போர் காலத்தில் வன்னியில் போக்குவரத்து வாகனங்கள் இல்லாத போது தேசிய வாகனமாக மிதி வண்டி விளங்கிய கால கட்டத்தில் தமது வாழ்க்கையினை ஓட்டுவதற்காக பெண்கள் மிதி வண்டியை ஓட்டினார்கள். நீண்ட தூரங்கள் அவர்களினால் பயணம் செய்யவேண்டியதாயிற்று. தாங்களே உழைக்கவேண்டிய நிலைக்கு வெளியே வந்தார்கள். இயல்பாக ஏற்பட்ட சமூக மாற்றமாகும். ஒரு சமூக வரையறைக்குள் இந்தப்பெண்கள் போராளிகளாக மாறினார்கள். இப்போது எங்களுடைய தேசம் இது என்பதினை உலகத்திற்கு தொட்டுக் காட்டும் அளவிற்கு பெண்கள் பலம் பண்டைத்தவர்களாக தாயகத்தில் உள்ளோம்.

விடுதலைப் போராட்டத்தில் நாங்கள நிலத்தை மட்டும் மீட்கும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. சமூக விடுதலையையும் மையமாக வைத்தே செயல்படுகின்றோம்.

ஒரு சமூக மாற்றத்தினை பெண்கள் மூலம் ஏற்படுத்தலாம். பெண்களாகிய நாங்கள் பலம் இல்லாதவர்கள் என்று யாரும் சொல்லக் கூடாது, இருக்கவும் முடியாது. மனித ஆளுமையினை கட்டி எழுப்புபவர்களாக தங்களுடைய பலத்தை உணர்ந்தவர்களாகவும் செயல்பட வேண்டும். எங்களுடைய ஆளுமையினை விருத்தி செய்து கொள்ள நாங்களே போராட வேண்டியவாகளாகவும் இருக்க வேண்டும். சொல்லுக்கு முதல் செயல் இருக்க வேண்டும் என எங்களுடைய தலைவர் அடிக்கடி கூறுவார் என மேலும தெரிவித்துள்ளார். (தி-13)

## கேணல் கருணா-ரெலவ்சன் அடுத்த வாரம் சந்திப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரைவ்ரெலவ்சனுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத்தளபதி கேணல் கருணாவுக்கும் இடையே அடுத்த வாரம் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்காலத்திட்ட வரைபு தொடர்பாக ஆலோசனை நடத்த வெளிநாடுகளுக்குச் சென்றதன் பின்னர்,கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் குறித்தே இச் சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளது.

இவ் அசாதாரணச் சூழ்நிலையை அடுத்து மாகாணத்தில் மாதாந்தம் இடம்பெற்றுவந்த தமிழ் -முஸ்லிம் உப குழுக்களின் மாவட்டக் கூட்டங்களும் தடைப்பட்டுள்ளன.

இக்கூட்டங்களை மீண்டும் நடத்துவது தொடர்பாகவும், கிழக்கு மாகாண வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (தி)

## 1000 உப தபால் அதிபர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

தபால் சேவை விஸ்தரிப்பின் கீழ் ஆயிரம் உப தபால் அதிபர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

இந்நியமனத்திற்கு தகுதி வாய்ந்தோரை தெரிவு செய்வதற் கென தபால் திணைக்களத்தினால் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கிடையில் 15 கோடி ரூபா செலவில் மேலும் 22 தபால் அலுவலகங்கள் நாட்டின் பல பாகங்களிலும் திறந்து வைக்கப்படவுள்ளன என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார். (தி)

## பரிசளிப்பு நிகழ்வு

(கொழும்புத்துறை)

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் அனுசரணையுடன் கரித்தாஸ்-செடெக் நிறுவனம் இணைந்து ''சிறுவர் உரிமைகள் பேணுதல்'' எனும கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நடாத்திய நாடகப்போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மேற்படிப் போட்டிகளில் மட்டக்களப்பு கலைஞர்கள் பங்கேற்ற ''அவங்க பேசமாட்டாங்க'' நாடகம் முதலாம் இடத்தையும்,யாழ் கொழும்புத்துறை கலைஞர்கள் பங்கேற்ற ''என்னைக் கண்டு கொள்'' நாடகம் 2ஆம் இடத்தையும், இளவாலை இளைஞர்கள் பங்கேற்ற ''விடியலை நோக்கி'' நாடகம் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க-51)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. -குறள்

வலம்புரி

## தியாக உணர்வு நிறையவே தேவை

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் யோகம் என்பது சோதிட வாசகம். கெட்டகிர கங்கள் கெட்டுப் போகும் போது, யோகம் கிட்டும் என் பதே அதன் பொருள். அவ் வகையில் நாட்டின் சமா தான முயற்சிக்கு மாரக னாக இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி யும் ஒரே வீட்டில் ஒன்று சேர்ந்து நிற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போனமையை நாட்டிற்கு நல்ல யோகமா கவே கருத வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யும், ஜே.வி.பியும் சமாதான முயற்சிக்குத் தீங்கு விளை விக்கக் கூடிய கிரகங்களாக இருப்பினும், அவை இரண் டும் ஒன்று சேர்ந்து ஒரே வீட்டில் நின்று கொண்டு, சமாதானப் புறாவைப் பார்க் குமாயின் அந்தப் பார்வை சமாதானப் புறாவுக்கு மாரகச் சனியாகிவிடும். எனினும் இரண்டும் வக்கிர மடைந்து கொண்டு, ஒரே வீட்டில் ஒன்று சேர்ந்து நிற்காமல் விலகிக் கொண்டமையால் சமாதா னப் புறாவின் மரணபயம் கடந்துவிட்ட தென்று கூற லாம். ஆயினும் எதிர்க் கிர கங்களின் தனிப் பார்வை கள் இருக்கவே செய்யுமென் பதை மறந்துவிடலாகாது. இவ்வாறு எதிர்க் கிரகங்க ளின் பார்வை தனித்தனியே நிகழும் போது சமாதானப் புறாவின் உடல் நலத்தில் உயரப் பறக்கும் அதன் முயற்சியில் சில சில தடை களும் தடங்கல்களும் நிக ழும் வாய்ப்பு ஏற்படலாம்.

எனினும் அதனை நிவர்த்தி செய்யும் பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலை மையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு உண்டு. சில விடயங்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தற்துணி வோடு நிறைவேற்ற வேண் டும். அவ்வாறு நிறைவேற்ற வேண்டிய விடயங்களில் ஒன்றானதாகவும், முதன் மையானதாகவும் இருப்பது விடுதலைப் புலிகளால் சமர்ப் பிக்கப்படவுள்ள இடைக் கால நிர்வாக சபைக்கான திட்ட வரைபாகும்.

புலிகளால் விரைவில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வுள்ள இடைக்கால சபைக் கான திட்டவரைபை அரசு அப்படியே ஏற்றுக் கொள் வதன் மூலம் தமிழர் தாயகப் பகுதியில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியும். இந் நிலைமை சமாதான முயற் சியை மேற்கொண்டு தொடர் வதற்கு வழிவகுக்கும்.

இதனை விடுத்து இடைக் கால் சபையை வழங்குவ தாலோ அன்றி விடுதலைப் புலிகளால் முன்வைக்கப் படும் திட்டவரைபில் வெட் டிக்கழிக்கும் நடவடிக்கை களை மேற்கொள்வதன் மூலமோ சமாதான இலக்கை அடைந்து விடமுடியாது.

இலங்கையைப் பொறுத்த வரை சமாதானம் என்பது எட்டப்பட வேண்டுமாயின் அதற்கு நிறைந்த விட்டுக் கொடுப்புக்களும் இடம் பெற வேண்டும். வெறுமே வாய்ப் பேச்சினால் மட்டும் சமாதா னத்தை அடைந்துவிட முடி யாது.

# கண்புரையை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி பார்வை இழப்பைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

நம் கண்களில் உள்ள லென்ஸ்கள் கமராவில் உள்ள லென்ஸ்களுக்கு ஒப்பானவை. ஏனெனில் நிறமில்லாத ஒளி ஊடுருவும் பளிங்குப் படலமாக உள்ள லென்ஸ் காரணமாகவே நம் மால இயற்கையை ரசிக்கமுடிகிறது.

விழிலென்ஸ் என்பது ஒளி எளி தாக ஊடுருவக்கூடிய புரதங்களின் தொகுப்பாகும். பிம்பங்களில் இருந்து ஊடுருவும் ஒளி விழித்திரையை அடந்து, அங்கிருந்து நரம்பு மூலம் மூளைக்குச் சென்று நாம் பொருள் களைப் பார்த்து உணர்வைப் பிரதி புலிக்கிறோம்.

### ஹட்ரக் என்றால் என்ன?

ஹட்ரக் என்றால் நீர் வீழ்ச்சி என்று அர்த்தம். அதாவது, நீர் வீழ்ச்சியினூடே ஒரு பொருளைப் பார்ப்பதுபோல கண்ணின் பார்வை தெரிவதால், இந்நோய் ஹட்ரக் என அழைக்கப்படுகின்றது கண்களில் உள்ள லென்ஸில் ஏதேனும் பிரச் சினை ஏற்பட்டால் பார்வையில் பாதிப்பு ஏற்படும். குறிப்பாக லென்ஸ் சில் புரை (ஹட்ரக்) ஏற்படுவதால் பார்வையில் பாதிப்பு ஏற்படுகிறது.

### புரைவரக் காரணங்கள் என்ன?

நம் நாட்டில் பொதுவாக 50முதல் 55 வயதிற்கு மேல் கண் லென்ஸ் களில் புரை ஏற்படுகிறது. சூரிய ஒளியில் புற ஊதாக் கதிர்கள் (UV rays) கீரைகள், கரட் உட்பட பச்சைக் காய்கறிகள் சாப்பிடாததால் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைவின்மை சர்க்கரை நோய் காரணமாகக் கண்களில் புரை இளம் வயதிலேயே கூட ஏற்பட வாய்ப்பு உண்டு. கர்ப்பிணிகளைப் பொறுத்தவரை கருவில் கண் உட்பட முக்கிய உறுப்புகள் உருவாகும் முதல் மூன்று மாதங்கள் மிக முக்கிய மானதாகும். இக் கால்கட்டத்தில் ருபெல்லா வைரஸ் நோய்த் தொற் றால் தாய் பாதிக்கப்பட்டால் கரு வில் வளரும் குழந்தையின் கண் களில் புரை ஏற்பட வாய்ப்பு உண்டு. பாரம்பரியத்தன்மை காரணமாகவும் குழந்தைகளுக்கு புரை வரலாம்.

### குழந்தை பிறந்தவுடன்...

குழந்தை பிறந்தவுடன் புரை இருக்கும் நிலையில் உடனடியாக கண் மருத்துவரிடம் காண்பிப்பது அவசியம். அதிலும் குழந்தையின் ஒரு கண்ணில் மட்டும் புரை இருந தால் உடனடியாக உஷார் அடைவது அவசியம். ஏனெனில்புரையுள்ள கண்ணில் பார்வைப் பாதிப்பு ஏற் பட்டு, மாறு கண் கோளாறைப் போன்று அது சோம்பல்க் கணணாக மாறி முழுப்பார்வை இழப்பு நிலைக் குச் சென்றுவிடும.

எனவே அதிரடி நடவடிக்கையாக அறுவைச்சிகிச்சை செய்து கண் புரையை நீக்கவேண்டும். வயதிற்கு தகுந்தாற்போல் அறுவைச்சிகிச்சை யின் போதே லென்ஸைப் பொருத்த லாம. குழந்தை பிறந்து சில மாதங் களே ஆகியிருக்கும் நிலையில அறுவைச்சிகிச்சை செய்து புரையை நீக்கவேண்டும். தாய்க்குக் கற்றுக் கொடுத்து புரைநீக்கம் செய்யப்பட்ட குழந்தையின் கண்ணுக்குத் தொடர்ந்து காண்டாக்ட் லென்ஸ் பொருத்து வது அவசியம். குழந்தை வளர்ந்து நான்கு வயது எட்டியவுடன் செயற்கை விழி லென்ஸைப் பொருத்தலாம்.

### முதல் குழந்தைக்கு இருந்தால்...

குடும்பத்தில் குழந்தைப் பருவத் திலே கண் புரை வரும் சூழ்நிலை இருந்தாலோ அல்லது முதல் குழந தைக்கு புரை ஏற்பட்டு சிகிச்சை அளிக் கப்பட்டிருந்தாலோ உஷாராக இருக்க வேண்டும். இரண்டாவது குழந்தை பிறந்தவுடனேயே கண் மருத்து வரி டம் காண்பிக்க வேண்டும்.

### விபத்தினால் கண் புரை



விபத்துக் காரணமாக திடீர் காயம் ஏற்படும்நிலையில் கண்ணில் புரை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. வெடிவிபத்து, பென்சில் பேனா, வில்-அம்பு போன்று ஆபத்தை விளைவிக்கக்கூடிய கூர்மையான பொருள்கள் கண்ணில் குத்துவ தால் புரை ஏற்படலாம்.

### இரண்டு கண்களிலும் வருமா?

முதுமையில் பெரும்பாலானோருக்கு இரண்டு கண்களிலும் புரை வரும். எந்தக்கண்ணின் லென்ஸில் புரை அளவு அதிகமாக உள்ளதோ அந் தக்கணணில் பார்வைத்திறன் அதிக மாகப் பாதிக்கப்படும்.

### அறிகுறிகள் என்ன?

பார்வைக்குறைபாடு உள்ளவர் கள் கண்ணாடி அணிந்து குறை யைச் சரி செயது கொள்கின்றனா. பார்வைத்திறனுக்காக கண்ணாடியைப் பொதுவாக ஆண்டுக்கு ஒருமுறை தான் மாற்ற வேண்டியிருக்கும். அப்

## மருத்துவ விளக்கம்

படியில்லாமல் கண்ணாடி அணிந்த பிறகு அடிக்கடி கண்ணாடியை மாற்ற வேண்டிவந்தால் கண்களைப் பரி சோதனை செய்து கொள்ளுங்கள். ஏனெனில் கண்ணல் புரை இருக்க வாய்புண்டு. கண்ணில் புரை ஏற்படும் நிலை யில் பார்வை மங்கலாகும். பிர காசமான வெளிச்சத்தைப் பார்த் தால் கண்கள் கூசும். நிலவைப்பார்த் தால் இரண்டு அல்லது மூன்றாகத் தெரியும்.

### புரையைத தள்ளிப்போட வழியுண்டா?

வயது ஆக ஆக அனைவருக் கும் கண்லென்ஸ்களில் புரை ஏற படுவதைத் தவிர்க்க முடியாது. எனி னும் சில முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகள் மூலம் புரை ஏற்படு வதைத்தள்ளிப்போட முடியும். அதா வது வெயிலில் செல்லும்போது சூரிய ஒளியின் புற ஊதாக் கதிர் கள் லென்ஸ்வழியே ஊடுருவி விழித் திரையைப் பாதிக்காமல் இருக்க எப்போதும் புற ஊதாக் கதிரை அனுமதிக்காத குளு குளு கண்ணாடி (UV protected Glass) அணிவது அவசியம். இதேபோன்று விற்றமின் ஏ,சி,ஈ,சத்துக்கொண்ட உணவுப் பொருட்களை குழந்தைப் பருவத்திலிருந்து சாப்பிடுவது அவசி யம். அதாவது கீரைகள் கரட், பப் பாளி, மாம்பழம், பால், வெண்ணை, முட்டை, மீன், (விற்றமின் ஏ) எலுமிச்சை, கொய்யா, முள்ளங்கி, உருளைக்கிழங்கு, [illegible] மல்லி (விற்றமின் சி) கரட், [illegible] கோஸ் கோதுமை, அப்பிள், [illegible]யின் மஞ்சள்கரு (விற்றமின் ஈ) ஆகிய வற்றை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் கண் புரை ஏற்படுவதைத் தள்ளிப்போட முடியும். சர்க்கரை நோய் இருந்தால் அதைக் கட்டுப் பாட்டில் வைத்துக்கொள்வதும் அவ சியம்.

### கண்புரையை தொடக்கத்திலேயே...

கண் புரைக்கான மேற்சொன்ன அறிகுறிகள் தெரிந்த உடனேயே மருத்துவரிடம் செல்வது அவசியம். எனெனில் புரையின் அடர்த்தி அதி கம் இல்லாத நிலையில் சிகிச்சை அளிப்பது மிகவும் எளிது.

### கண்புரை முற்றினால் ஆபத்து என்ன?

பார்வையில் குறை ஏற்பட்ட பிற கும் கூட அலட்சியமாக இருந்தால் லென்ஸில் ஏற்பட்டகுறை அடர்த்தி யாகிக்கொண்டே வரும். இறுதியில் புரையின் அடர்த்தி அதிகமாகி வெடித்து பக்கவிளைவுகள் ஏற் படும். இந்நிலையில் புரையை அகற் றுவது. கடினமாகப் பாாவையே பறி போகும்நிலை ஏற்படும்.

### புரையினால் ஏற்படும் கண்ணீர் அழுத்தம் (Secondary Glaucoma)

கணபுரை அடர்த்தியாகும் நிலை யில் கண் நணிர் அழுத்தநோய் (க்ளாக்கோமா) வருவதற்கான வாயப்புகள் உண்டு. அதாவது புரை அடர்த்தியாகும் நிலையில் திரவ நிலைக்கு லென்ஸ் தள்ளப்பட்டு வெடித்துவிடும். இதனால் பக்க விளைவுகள் ஏற்பட்டு கண்ணீர் அழுத்தம் அதிகமாகும். தாளமுடி யாத கண்வலி ஏற்படும். இது தேவையா? எனவே புரைக்கு தாம திக்காமல் சிகிச்சை பெற்றுவிட் டால் கண்ணீர் அழுத்த நோய்வர வாய்ப்பில்லை. அலட்சியமாக இருந் தால் முதலில்கண்ணீர் அழுத்த நோயைக் குணப்படுத்திவிட்டே புரைக்கு சிகிச்சை செய்யப்படும்.

### சோதனைகள் என்ன?

சாதாரண 'ஸ்லிட் லேம்ப்' மருத் துவ சோதனையிலேயே புரை இருப் பதைக் கண்டுபிடித்துவிட முடியும். கண் புரை அடர்த்தியின் தன்மைக்கு ஏற்ப சிகிச்சைநாள் தீர்மானிக்கப் படும். கண்முன்னே யன்னல் போன்று உள்ள விழிவெண்படலம் (கார் னியா) வழியாக கருவியை விட்டுத் தான் கண்புரையை நீக்க வேண்டி யிருக்கும் என்பதால் கார்னியாவின தன்மையைச் சோதனை செய்வதும் அவசியம்.

### அல்ட்ரா சவுண்ட் சோதனை

கண்ணில் எந்த பவர் செயற்கை விழி லென்ஸைப் பொருத்த வேண் டும் என்பதைக் கணக்கிட 'ஏ ஸ்கேன் பயோமெட்ரி' சோதனையுள்ளது. அல்ட்ரா சவுண்ட் கருவி மூலம் கண்களை பரிசோதனைசெய்து புரை நீக்கத்திக்குப் பிறகு பொருத்தப்பட வுள்ள செயற்கைவிழி லென்ஸின் பவர் தீர்மானிக்கப்படுகிறது.

### இரத்தத்தில் சர்க்கரை

கண்புரை நீக்க அறுவைச் சிகிச் சைக்கு முன்பு நோயாளியின் இரத் தத்தில் சர்க்கரை உள்ளதா என் பதைப் பரிசோதனை செய்வது அவ சியம். சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்து செய்யப்படும் இரத்தப் பரி சோதனையில் இரத்த சர்க்கரை அளவு 180 மில்லி கிராமுக்குக் கீழே இருப் பது அவசியம். அப் போதுதான் அறு வைச சிகிச்சைக்குப் பிறகு விரைவாகக காயம் ஆறும்.

### புரைநீக்கமும் செயற்கை விழிலென்ஸ் பொருத்தலும்

முன்புபோல் புரைநீக்கத்திற்கு மயக்கஊசி போடப்படுவதில்லை. சொட்டு மருந்தைப் பயன்படுத்திப் பாதிக்கப்பட்ட கண்பகுதியை மட்டும் மரத்துபபோகச்செய்து புரை நீக்கப் படுகிறது. ஃபேகோ எமல்சி ஃபையர் (Phaco) கருவிமூலம் அல்ட்ரா சவுண்ட் சக்தியைப் பயன்படுத்தி ஒரு விநாடிக்கு 45ஆயிரம் அதிர்வு

**எஸ். வசுந்தரா**

களில் பழுதுபட்ட லென்ஸ் திரவப் பொருளாக மாற்றப்படும். இவ்வாறு மாற்றபபடும் நிலையிலேயே உடனுக் குடன் திரவப்பொருள் உறிஞ்சி வெளியே எடுக்கப்படும்.

உடனடியாக செயற்கை விழி லென்ஸ் பொருத்தப்படும். இது எல் லாமே 5நிமிடத்தில் முடிந்துவிடும். இவ்வாறு நவீன சிகிச்சை முறை யில் மயக்கஊசி, தையல் கட்டு இன்றி கண்புரை நீக்கப்படுவதால் சிகிச்சைக்குப்பிறகு நோயாளி இரு மினாலோ அல்லது தும்மினாலோ எவ்விதப் பிரச்சினையும் வராது. மூன்று அல்லது நான்கு நாட்களில் வழக்கம்போல் நோயாளி செயல் படத் தொடங்கிவிடலாம்..

### இதய நோயாளிகளே...

கண்பகுதிக்கு மட்டும் மயக்க சொட்டுமருந்து (Local Anesthesia) போடப்பட்டு சிகிச்சை அளிக் கப்படுவதால் இதய நோயாளிகள் சர்க்கரை நோய்ாளிகள் ஆகியோர் எவ்வித அச்சமும் இன்றி கண்புரை அறுவைச்சிகிச்சையைச் செய்து கொள்ளலாம்.

### பார்வைக்கோளாறுக்கும் சேர்த்து...

கண்ணில் புரை வருவதற்கு முன்பே இளம் வயதிலேயே அதிக பார்வைக்கோளாறு (மைனஸ் அல் லது பிளஸ்) இருந்தால் அதற்கு தேவையான பவரையும் சேர்த்துச் சரிசெய்யும் வகையில் செயற்கை விழி லென்ஸைப் பொருத்தமுடியும். அதனால் புரை நீக்கத்திற்குப் பிறகு செயற்கைவிழி லென்ஸ் காரணமாக மூக்குக்கண்ணாடி இல்லாமல் பாாக்க முடியும். ஏனெனில் கண்புரை சிகிச்சை செய்வதற்கு முன்பே பார்வைக் கோளாறுக்கு தேவைப்படும் லென் ஸின் பவரும் சேர்த்து கணக்கீடு செய்யப்படும்.

### முன்கூட்டியே சிகிச்சை

பார்வை மங்கலாகத் தெரிய ஆரம்பித்த உடனேயே கண் மருத் துவரிடம் கண்களைப் பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். குறிப்பாக 50வயதிற்கு மேல் இப்பிரச்சினை ஏற்படும் நிலையில் புரையை அடர்த் தியாக விடாமல் உடனடியாக எளிய கண்புரை நீக்க சிகிச்சையைச் செய்து கொண்டு பார்வை இழப்பைத் தவிர்ப் பதே புத்திசாலித்தனம். □

* * *

## தினசரி தியானம்

### சகோதரப் பாசம்

இராமாயணத்தில் இலட்சுமணன் இராமபிரானிடத்தே கொண்டிருந்த பக்தியை எண்ணிப் பாருங்கள். இன்றைக்கு அதற்குமாறாக என்னென்ன பார்க்கிறீர்கள்? அற்ப விஷயங் களுக்காகச் சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். இது சிறுமையான வருந்தத்தக்க நிலையல்லவா? ஒரு மனி தனே! இலட்சுமணனாகிய பெருமை மிக்க பாத்திரத்தையும் அவன் தன் சகோதரனிடத்தே வைத்திருந்த பக்தியையும் எண்ணிப்பார். அவனை முன்மாதிரியாக வைத்துக்கொள். அவனது உயர்ந்த குணநலன்களை எடுத்துக்கொள். சுயநலம் இன்றி சகோதரர்களை நேசிக்கக் கற்றுக்கொள். இல்லத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் பெறுவாய்.

சுவாமி சிவானந்தர்

# பிரகாசமான எதிர்காலத்திற்கான முயற்சி இலங்கையில் நடக்கிறது

## அமெரிக்க துணை அமைச்சர் கருத்து

(வாசிங்டன்)

இலங்கை பயங்கரமும் வன்செயலும் நிறைந்த இரண்டு தசாப்தங்களைக் கண்டுள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் துன்பங்களுக்குள்ளாகினர். முழுநாடும் அதற்கான விலையைக் கொடுத்துள்ளது. ஆனால் 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சண்டையில் ஈடுபட்டிருந்த இருதரப்பினரும் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றை செய்து கொண்டனர். அதன் பின்னர் ஒரு பிரகாசமான எதிர்காலத்தைத் கட்டியெழுப்புவதற்காக அவர்கள் வேதனைகளைத் தாங்கி கொண்டு ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு அமெரிக்க துணை இராஜாங்க அமைச்சர் றிச்சார்ட் ஆர்மிடேஜ், இலங்கைக்கும் மாலைதீவுக்குமான அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி ஜே.லன்ட்ஸ் ரெட்டின் சத்தியப்பிரமாண வைபவத்தில் பேசுகையில் கூறினார். இந்த வைபவத்தில் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சுபசிங்கவும் கலந்துகொண்டார்.

திரு.ஆர்மிடேஜ் அந்நிகழ்வில் மேலும் கருத்து வெளியிடுகையில், அமெரிக்காவைப் பொறுத்தவரை அத்தீவில் நடைபெற்றுவந்த இரத்தக்களரிக்கும், ஒழுங்கீனங்களுக்கும் எம்மை சற்று தூரத்திலேயே சிலகாலத்திற்கு நிறுத்தி வைத்திருந்தன. ஆனால் நிரந்தரமான அமைதிக்காக நடைமுறைகள் மேம்பட்டிருப்பதனாலும் ஸ்திரமான சர்வதேச தொடர்புகளிலும் உறுதியான பொருளாதாரத்திலும் உறுதியான நம்பிக்கையுள்ள அரசு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாலும் எமது இருதரப்புத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக உணர்கின்றோம் என்று கூறினார். (பி)

### கிழக்கு மாகாணப் பாதுகாப்பு விவகாரம்

# தமிழ்—முஸ்லிம் பிரதிநிதிகள் பிரதமருடன் முக்கிய சந்திப்பு

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில் விககிரம சிங்காவுடனான இம்முக்கிய சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரம், பாதுகாப்பு தொடர்பான முக்கிய விடயங்கள் சுமுகமாக பேசித் தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட, ஜோன் அமரதுங்கா, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ ஆனந்தராஜா ஆகியோர் உடனிருநதனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின சார்பில் திருமலை மாவட்ட எம்.பி. இரா.சம்பந்தன், யாழ்மாவட்ட எம்.பிக்களான வி.ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.ரவிராஜ், என்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன், சந்திரநேரு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கிம் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற எம்.பிக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ம)

ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகனின் அழகிய படம் வெளியீடு

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனின் தேர்த்திருவிழாவான இன்று சந்நிதி முருகனின் அழகிய படம் திரு.எம்.கே. சிவாஜிலிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால்

## சந்நிதி முருகன் படம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனின் தேர்த் திருவிழாவான இன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சந்நிதி முருகனின் அழகிய படம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் வெளியிட்டு வைக்கப்

### யாழ். மாவட்டத்தில்

# பொருளியல் அபிவிருத்தி சர்வோதயம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றை சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட செயலகத்தால் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதற் தடவையாக இத்திட்டம் நேற்றைய தினம் முதல் சுழிபுரம் .கெருடாவில் சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் சேமிப்பு, கடன், தொழிற்பயிற்சி, சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு வகையான கடன் திட்டங்களும் அறிமுகப் படுத்தப்படவுள்ளன.

இத்திட்டம் தேவைகளுக்கேற்ப காலப்போக்கில் விஸ்தரிக்கப்படும் என சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் க.கனகரட்ணம் தெரிவித்துள்ளார். (க.04)

## மடுகே பஞ்ஞாசிக தேரர் காலமானார்

(கொழும்பு)

அதிசங்கைக்குரிய மடுகே பஞ்ஞாசிக மகாநாயக்க தேரர் நேற்று காலமானார். அவருக்கு வயது 90. 1913ஆம் ஆண்டு பிறந்த அவர் 1926ல் புத்தகுருவாக தீட்சை பெற்றார்.

தேரரின் மரணச்சடங்குகள் எதிர்வரும் சனிக்கிழமை சுதந்திர சதுர்க்கத்தில் அரச மரியாதையோடு இடம்பெறும்.

மகாநாயக்கரின் மறைவு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார். (த)

---

## ஆளும்கட்சி....

நிலையில் உள்ளதுடன் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாகியுள்ளது.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விரிவுபடுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்குக் கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்து ஆதரவாளர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கைச்சாத்திடப்படவிருந்த கூட்டு ஒப்பந்தம் அரசின் இனப் பிரச்சினைக் தீர்வு விவகார விடயங்

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினர் பின்வருவோரை யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

திருமதி அழகேஸ்வரன் மொறின் கிறிஸ்ரினா நல்லூர், கந்தையா யோகரட்ணம் குருநகர், திருமதி விஜயரட்ணம் தனலஷ்மி ஐந்து சந்தியடி, செல்வி செல்வராஜா மைதிலி பண்டத்தரிப்பு, திருமதி வைரமுத்து ராஜேஸ்வரி மானிப்பாய் திருமதி சிவராஜா நாகேஸ்வரி யாழ்ப்பாணம். (தி-10)

## தும்பளையில் சோதனை

(திருநெல்வெலி)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் படையினர் நேற்று மாலை திடீர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையில் வீதியில் வந்த வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டன. (த-43)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(கந்தரோடை)

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியின்

பிரதிநிதிகள் நேற்று பிரதமா ரணில் விக்கிரம சிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடனான இம்முக்கிய சந்திப்பின்

அமரதுங்கா, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ ஆனந்தராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின

சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற எம்.பிக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ம)

# ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகனின் அழகிய படம் வெளியீடு

*ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனின் தேர்த்திருவிழாவான இன்று சந்நிதி முருகனின் அழகிய படம் திரு.எம்.கே. சிவாஜிலிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் தேருக்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் வைத்து காலை 10.00மணியளவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமம் சார்பில் வெளியிடப்படவுள்ளது.*

**படம் பிரதியாக்கம் – விநியோகம**

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

*அப் படமானது இன்றைய தினமே விற்பனையாகவுள்ளது அத்துடன் ரூபா.50 பெறுமதியான "ஸ்ரீ முருகன் பாமாலை" இலவசமாக வழங்கப்படும்.*

குறிப்பு:- இதுவரை காலமும் பக்தர்களின் உதவியால் விதவைகள், குழந்தைகள் போன்றவர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் மூலம் ரூபா ஐம்பது லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்**
**பருத்தித்துறை**

[C/6591]

## சந்நிதி முருகன் படம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனின் தேர்த் திருவிழாவான இன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சந்நிதி முருகனின் அழகிய படம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சந்நிதித் தேரின் அருகிலுள்ள மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படும். (த)

## இக்கட்டான....

கட்சிகள் கூக்குரல் இட்டு வருகின்றன.

எதிர்க்கட்சிகள் கோரிவருவதைப் போல் ஒரே இரவில் இவ்விடயங்களை அரசாங்கத்தால் செய்து விட முடியும் அவ்வாறு செய்தால் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு அவர்களால் முகம் கொடுக்க முடியுமா? தற்போது அரசினாலும் விடுதலைப் புலிகளினாலும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்தால் அதற்கு முகம் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றார்களா? என்றும் அமைச்சர் பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

## இராணுவ...

(வயது 13) என்ற மாணவியே படுகாயங்களுக்குள்ளானவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ பவுசர் சைக்கிள் கடைக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பிரஸ்தாப மாணவியை மாம்பழம் சந்தியில் மோதியது. இவ் விபத்தில் சிக்குண்டு வாகனத்தின் கீழே முனகிக் கொண்டிருந்த மாணவியை அப் பகுதியில் நின்ற ஆட்டோ சாரதிகள் ஒருவாறு மீட்டு உடனடியாக யாழ். போதனா வைத்திசாலையில் சேர்த்தனர். மாணவியின் நெற்றியிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப மாணவி தாய் தந்தையை இழந்த நிலையில் உறவினர் வீட்டில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த-51)

## ஆளும்கட்சி....

நிலையில் உள்ளதுடன் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாகியுள்ளது.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விரிவுபடுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்குக் கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்து ஆதரவாளர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கைச்சாத்திடப்படவிருந்த கூட்டு ஒப்பந்தம் அரசின் இனப் பிரச்சினைத் தீர்வு விவகார விடயங்களினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இவ்விரு கட்சிக்கும் இடையே பாரிய பிளவுகள் எவையும் ஏற்படாது இருப்பினும். எதிர் வரும் தேர்தல்களில் இரு கட்சிகளும் இணைந்தே போட்டியிடும்.

இதனை அரசியல் வாதிகளுக்கு உணர்த்த விரும்புகின்றேன். எவ்வாறாயினும் அடுத்து வரும் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைக்கும். இதனை இன்றைய அரசியல் நிலைவரங்கள் சுட்டிக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

பகுதியில் படையினர் நேற்று மாலை திடீர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையில் வீதியில் வந்த வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டன. (த-43)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(கந்தரோடை)

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 15 வயதுப் பிரிவில சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், 14வயதுப் பிரிவில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக்கல்லூரி, 18 வயதுப்பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் ஆகிய அணிகள் மோதுகின்றன.

(த-103)

# சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல திருவிழா

மேற்படி திருவிழா 11.09.2003ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவ நாட்கள் இடம்பெறும். 19.09.2003 வெள்ளிக் கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் 20.09.2003 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும் நடைபெறும்

**இத் திருவிழாவை முன்னிட்டு கடைகளுக்கான கேள்வி கூறல் 13.09.2003ம் திகதி காலை 9.00மணிக்கு நடைபெறும்**

**யாத்திரைத்தல பரிபாலகர்**

[7599]

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கலைவாணி சனசமூக நிலைய முன்பள்ளி பாடசாலை கட்டடம் அமைப்பதற்கும் கலைப்பாகம் புனரமைப்பு செய்வதற்கும் மாண்பு மிகு கௌரவ இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நிதி வழங்கியுள்ளார்.**

**அத்துடன் எமது பகுதி மக்களுக்கு சீமெந்தும், மலசல கூட அமைப்பு கட்டடப் பொருள்களும் வழங்கியுள்ளார்.**

**அன்றியும் எமது மக்களின் குடியிருப்பு வசதிக்காக வீடுகள் அமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளார்.**

**எமது மாண்பு மிகு கௌரவ இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**கலைவாணி சனசமூக நிலையம்**
**நாவாந்துறை**

[7457]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.